வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.
MARUTHI MONEY EXCHANGE
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.



Email : news@eelanadu.lk | மலர் : 03 | 23.09.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 288 | பக்கங்கள் : 16


# நல்லிணக்கத்துக்காக அரசு பாடுபடுகின்றது!

## ஐ. நாவில் கூறினார் அலி சப்ரி

- மதவெறுப்பு விடயத்தில் பூச்சிய சகிப்புதன்மை
- சிறுபான்மையினருக்கு அரசமைப்பு மூலம் உரிமை!
- சகல சமூகங்களின் பாதுகாப்பிலும் உறுதிப்பாடு




நியூயோர்க், செப்ரெம்பர் 23

அனைத்து சமூகங்களின் மத்தியிலும் நம்பிக்கையையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப அரசாங்கம் முன்னுரிமை வழங்குகிறது. அத்துடன், மத வெறுப்பு விடயத்தில் அரசாங்கம் பூச்சிய சகிப்புத் தன்மையை பின்பற்றுகிறது.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் 77ஆவது கூட்டத் தொடரில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். 15

# பலாலிக்கு விமானத்தை இயக்க இந்தியா ஆர்வம் காட்டவில்லை!

## விமான சேவைகள் அமைச்சர்

கொழும்பு, செப். 23

யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்துக்கு சேவையை நடத்த விரும்பும் இந்திய விமானங்களுக்கு அரசாங்கம் சலுகைகளை வழங்குகிறது. ஆனால், சேவையை வழங்க இந்திய விமான நிறுவனங்கள் ஆர்வம் காட்டவில்லை என்று பொது விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறீபால டீ சில்வா நேற்று தெரிவித்தார். 15

# இந்தியா எப்போதும் தயாராகவே உள்ளது!

- நிமாலுக்கு சிறீதரன் பதில்

கொழும்பு, செப். 23

யாழ்ப்பாணத்துக்கு விமான சேவைகளை நடத்த இந்தியா - இந்தியன் எயார் லைன்ஸ் ஆர்வமாகவே இருக்கிறது. அரசாங்கமே சலுகைகளை வழங்காமல் இருக்கிறது என்று குற்றஞ்சாட்டினார் தமிழத் தேசியக் கூட் 15

# மின்வெட்டு நேரம் உயர்வு!

கொழும்பு, செப். 23

இன்று வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை மின்வெட்டு நேரம் ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 2 மணி 20 நிமிடங்கள் மின்வெட்டு நடைமுறையாகும்.

இலங்கை மின்சார சபையின் இந்த மின்வெட்டுக் கோரிக்கைக்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

வெஸ்ட்கோஸ்ட் மின் நிலையத்தில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு, பழைய லக்ஷபான மின் உற்பத்தி நிலையம் சேவையில் இன்மை ஆகியவற்றை கருத்தில் கொண்டு மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

ஏ தொடக்கம் டபிள்யூ வரையான வலயங்களில் பகலில் ஒரு மணி நேரமும் இரவில் ஒரு மணி 20 நிமிடங்களும் சுழற்சி முறையில் மின்வெட்டு நடைமுறைக்கு வரும் என்று ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஐ)

# யாழில் போதை பாவனை இரு மடங்காக அதிகரிப்பு!

## மருத்துவர் சத்தியமூர்த்தி



யாழ்ப்பாணம், செப். 23

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகின்றபோது இந்த வருடம் இருமடங்காக அதிகரித்துள்ளது என்று யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவதால் 15

# நாகர்கோவில் மாணவர் படுகொலை; கதறியழுது உறவுகள் நேற்று அஞ்சலி!



வடமராட்சி, செப். 23

நாகர்கோயில் மகா வித்தியாலயம் மீதான விமானப் படையின் குண்டுவீச்சில் பலியான 21 மாணவர்களின் 27ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப் பட்டது.

இந்த நிகழ்வில், கொல்லப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள் கதறி அழுது தங்கள் அஞ்சலியை செலுத்தினர்.

1995 செப்ரெம் 15

# நிலையான சமாதானத்தை ஏற்படுத்த வடக்கு, கிழக்கு எம். பிக்களுடன் பேச்சு!

## நீதி அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்

கொழும்பு, செப். 23

வடக்கு - கிழக்கில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த அந்த மாகாணங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்த தாம் உத்தேசித்துள்ளார் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நேற்றைய பாராளுமன்ற அமர்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் பேரவை அமர்வில் போர் குற்றம் தொடர்பில் வெளியக விசாரணை நாட்டின் அரசமைப்புக்கு முரணானது என்று வெளி 15


உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

அண்மையில் தான் நினைத்த அனைவருக்கும் இரா ஜாங்க அமைச்சர் பதவிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு ஜனாதிபதியை இணங்க வைக்க முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பாவித்த துருப்புச் சீட்டை - இப்போது தான் விரும்பும் அனைவருக்கும் அமைச்சரவை அந்தஸ் துள்ள அமைச்சர்களாக நியமிக்கவும் பயன்படுத்தி வருகிறார் என்று தெரிய வந்திருக்கின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரவையை விரிவுபடுத்தி பொதுஜன பெரமுன கட்சியை பிரதிநிதித் துவப்படுத்தும் முப்பத்தியேழு பாராளுமன்ற உறுப்பினர்களை அண்மையில் இராஜாங்க அமைச்சர் களாக நியமித்திருந்தார்.

ஆனால், இவர்கள் அனைவரையும் நியமிக்க ஜனாதி பதி எப்படி இணங்கினார் என்பது மர்மமாகவே இருந் தது. அந்த முப்பத்தியேழு பேரில் பலர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டவர்கள். அவர்களை நியமிக்க எப்படி ரணில் சம்மதித்தார் என்பது மர்மமா கவே இருந்துவந்தது.

பொதுஜன பெரமுனவின் மூளையாக செயல்பட்டு வரும் பஸில் ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இடம்பெற்ற பல சுற்று இரகசியப் பேச்சுகளின் பின்னரே இந்த இராஜாங்க அமைச்சர்களை நியமித்ததாகவும், இந்த கலந்துரை யாடல்களின்போது ஜனாதிபதி தரப்பில் பல்வேறு யோசனைகள், ஆலோசனைகள், குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவை எதனையும் ஏற்றுக்கொள்ளாத பஸில், தமது முடிவில் பிடிவாதமாக இருந்தாரெனவும், இறுதியாக இரு தரப்பினரும் இணக் கப்பாட்டுக்கு வரமுடிந்ததாகவும் கொழும்பில் விடயம றிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு கட்டத்தில் பேச்சு முறிவடையக்கூடிய நிலையில் பஸில் தனது கடைசி துருப்பு சீட்டை வாசித்து ரணிலை சரணடையச் செய்தார் என்றும், ஒரு வாரத்துக்குள் இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்படாது விட்டால் அரசாங்கத்துக்குள் பல பாரிய பிரச்னைகள் உருவாக லாம் என்றும், நினைத்துப் பார்க்க முடியாத பாராளு மன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று ஆளும் கட்சிக்குள் சுயேச்சையாக வெளியேறலாம் எனவும் ரணிலுக்கு தெரிவித்து பஸில் தனது விருப்பத்தை நிறைவேற்றியி ருக்கிறார் என்கிறது விசயமறிந்த அந்த வட்டாரம்.

இப்போது, அமைச்சரவை அமைச்சர்களை நியமிப்பது தொடர்பிலும் ரணிலிடம் பஸில் பல யோசனைகளை முன்வைத்துள்ளார். நாமல் ராஜபக்ஷ, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, பவித்ரா வன்னியா ராச்சி, மகிந்தானந்த அளுத்கமகே மற்றும் ரோஹித அபேகுணவர்த்தன ஆகியோர் அமைச்சரவை அமைச்சர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதிக்கு பஸில் அறிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களில் சிலரை நியமிக்க ரணில் விரும்பாதபோதிலும், அதனை ஏற்றுக்கொள்ள பஸில் தயாராக இல்லை என்கின்றது அந்த வட்டாரம்.

அரசாங்கம் பலமாக இருப்பதைக் காட்டுவதற்கு இவர்கள் அனைவரும் அமைச்சரவையில் இடம்பெற வேண்டும் என்று ஜனாதிபதிக்கு தெரிவித்துள்ளதுடன், இதன்படி இந்த நியமனங்களை உடனடியாக செய்து அரசாங்கத்தை பலப்படுத்துமாறும், இல்லையேல் அரசாங்கத்துக்குள் பல்வேறு பிரச்னைகள் ஏற்படக் கூடும் என்றும் அவர் மீண்டும் எச்சரிக்கை விடுத்திருக் கிறாராம்.

இதன்படி, பஸில் பரிந்துரைத்த பெயர்கள் உட்பட மேலும் சிலருடன் பன்னிரண்டு அமைச்சரவை அமைச்சர்களை அடுத்த சில நாட்களுக்குள் நியமிக்க ரணில் தயாராகி உள்ளாராம்.

எதிர்வரும் இருபத்தி ஐந்தாம் திகதி ஜப்பான் செல்லும் அவர், அங்கு பல்வேறு உதவிகளை பெறலாம் என்று எதிர்பார்ப்பதால், அதனைப் பெற்றுக்கொண்டு திரும்புகின்றபோது தன்மீது இன்னும் பலருக்கு நம்பிக்கை ஏற்படலாம் என்பதால், அது எதிரணியிலி ருந்து சிலரை இழுத்தெடுக்க உதவும் என்பதால் அவ்வாறு சென்று வந்த பின்னரே புதிய அமைச்சரவை நியமிக்கப்படலாம் என்கின்றன ரணில் தரப்பு செய் திகள்.!

- ஊர்க்குருவி

# போதை பாவனையை கட்டுப்படுத்த பாடசாலைகளின் பங்களிப்பு போதாது!

### சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன்

யாழ்ப்பாணம், செப். 23

போதைப்பொருள் பாவ னையைக் கட்டுப்படுத்துவ தற்கு யாழ்ப்பாணம் மாவட் டத்தில் காணப்படுகின்ற பாட சாலைகளின் பங்களிப்புப் போதாது என்று யாழ். போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங் களிடம் அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு,

"யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. எனி னும், ஆசிரியர்கள், அதிபர்கள் தமது பாடசாலைகளில் நற் பெயருக்குக் களங்கம் வந்து விடக்கூடாது என்றால் அது குறித்த தகவல்களை வெளிப்ப டுத்தாது மறைக்கின்றனர்.

இந்தச் செயல் கொலைக் குச் சமனானது. இனி இந்த விடயங்களை வெளிப்படை யாகப் பேசவேண்டும். ஏனெ னில் நிலைமை மோசமா கிவிட்டது.

யாழ். மாவட்டத்தின் பிரபல பாடசாலையொன்றில் அண்மையில் மூன்று மாணவர் கள் மயங்கி விழுந்தனர். பரிசோதனையின்போது அவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியி ருந்தனர்.

பின்னர் பாடசாலையின் நற்பெயரைக் கருத்தில் கொண்டு சில விடயங்கள் மூடிமறைக்கப்பட்டுவிட்டன. இந்த நிலைமை கவலையளிக் கின்றது" - என்றார். (ஐ)

## குருந்தூர்மலை போராட்டத்தில் கைதானவர்களுக்குப் பிணை!

முல்லைத்தீவு, செப். 23

குருந்தூர்மலையில் காணி ஆக்கிரமிப்புக்கு எதிராக போராட்டத்தை ஏற்பாடு செய்த து. ரவிகரன், இ. மயூ ரன் ஆகியோர் நேற்று பிணை யில் விடுவிக்கப்பட்டனர்.

குருந்தூர்மலையைச் சூழ வுள்ள தமிழ் மக்களுக்குரிய 632ஏக்கர் பூர்வீக காணிகளை தொல்லியல் திணைக்களம் சுவீகரிக்க நடவடிக்கை எடுத் தது. இதேபோன்று, நீதிமன்ற கட்டளையைப் புறந்தள்ளி பௌத்த கட்டுமானம் மேற் கொள்ளப்படுவதை கண்டித் தும் நேற்று முன்தினம் குருந் தூர்மலையில் போராட்டம் இடம்பெற்றது.

இதைத் தொடர்ந்து போராட்ட ஏற்பாட்டாளர்க ளான முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன், சமூக செயல்பாட் டாளர் இ. மயூரன் ஆகியோர் பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்கு அழைக்கப் பட்டு கைது செய்யப்பட் டனர்.

இந்நிலையில், அவர்கள் இருவரும் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ஐ)

## குழந்தைகள் மத்தியில் மீண்டும் பரவும் நோய்!

### சிறுவர் மருத்துவமனை எச்சரிக்கை

கொழும்பு, செப். 23

குழந்தைகளிடையே மீண் டும் கை, கால் மற்றும் வாய்க ளில் தளும்பு அல்லது கொப்பு ளங்கள் பரவுவதாக கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

காய்ச்சலுடன் அல்லது காய்ச்சல் இன்றி சிறார்களின் கை, கால் மற்றும் வாயைச் சுற்றி சிவப்பு நிறத்தில் தளும்பு கள் அல்லது வெள்ளை நிற கொப்புளங்கள் ஏற்படுவ தாகவும் அவர் தெரிவித்தார்.

பெற்றோர் இது தொடர் பில் கவனம் செலுத்த வேண் டும் எனவும், 6 வயதுக்கு உட் பட்ட சிறுவர்களுக்கே இந்த தொற்று ஏற்படுவதால், அவ்வா றான கொப்புளங்கள் மற்றும் தளும்புகள் காணப்படுமாயின் பிள்ளைகளை வெளி இடங்க ளுக்கு அனுப்பாது சில நாட்கள் வரை வீடுகளில் வைத்திருக்கு மாறும் பெற்றோருக்கு ஆலோ சனை வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்தே இன்று முதல் கொழும்புக்கான பஸ் சேவை

### யாழ். மாநகர முதல்வர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 23

தனியார் நெடுந்தூர (கொழும்பு) பேருந்துகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் முனீஸ்வரன் வீதியி லுள்ள (புல்லுக் குளம் முன் பாக) புதிய நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு செல்லும் என்று யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் அறிவித் துள்ளார்.

யாழ். மாநகர சபை தொல் பொருள் திணைக்களம் மற் றும் நகர அபவிருத்தி அதிகார சபை மற்றும் பொலிஸ் பிரிவு டன் இணைந்து இந்த நடை முறையை ஒழுங்குபடுத் தியுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை முதல் கோட்டை பகுதியில் நிறுத்தி வைக்கப்படும் நெடுந் தூர பேருந்துகள் அனைத்தும் இடுகாட்டு வீதியிலுள்ள பல. நோக்கு கூட்டுறவு சங்கத்தின் காணியில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள தரிப்பிடத்திலேயே தரிக்க வேண்டும். இதனை மீறி கோட்டை பகுதியில் தரித்து நிற்கும் பேருந்துகளுக்கு தண் டப்பணம் அறிவிட சட்ட நடவ டிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்றும் மாநகர முதல்வர் மேலும் அறிவித் துள்ளார். (ஐ)

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், செப். 23

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டில் அவர், குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக நடத்தப் படும் வாராந்த சொற்பொழி வும் - மாதந்த நாயன்மார் குருபூஜை நிகழ்வு கனடாவின் ரொறன்ரோவில் வசிக்கும் சிவஸ்ரீ பால. திருகுணானந்த குருக்களின் அனுசரணையில் நடக்கிறது.

இந்த நிகழ்வின் வரிசை யில், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப் பில் 39ஆவது சொற்பொழிவு தாவடி ஸ்ரீ ஆதிகாளி அம்மன் அறநெறிப் பாடசாலை மண்ட பத்தில் இன்று வெள்ளிக் கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில், 'கலியுகத்தில் நமக்கு வழிகாட்டிய அவதாரம் ஆறு முக நாவலர் பெருமான்' எனும் தொனிப்பொருளில் இளம் சைவப்புலவர் நித்திய பாபுதரன் சொற்பொழிவாற் றுவார். நிறைவில் வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்க ளுக்கு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)

■■■

யாழ்ப்பாணம், செப். 23

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி ஆலயத்தில் நடத்தப் படும் வாராந்த சிறப்புச் சொற் பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடை பெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப் பில் நடைபெறும் இந்த நிகழ் வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் சி. க. கமல நாதன் 'பிதிர் வழிபாட்டு மகிமை " என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
23.09.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 06

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தமிழர் பிரச்னையில் அமெரிக்கா?

பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிபுணர்கள் குழுவொன்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு சென்று வந்ததைத் தொடர்ந்து, அமெரிக்கா தொடர்பில் சுமந்திரன் எதிர்வு கூறலொன்றை செய்திருந்தார். அதாவது, இந்த ஆண்டு ஜனவரி மாதத்தின் நடுப்பகுதிக்குள் அமெரிக்கா உறுதியான சில தீர்மானங்களை எடுக்கவுள்ளது. இதனை சிலர் அப்போது பாரதூரமான விடயமாகக் கருதிக் கொண்டனர். ஆனால், நிபுணர் குழுவில் பங்குகொண்ட கலாநிதி நிர்மலா சந்திரஹாசன் மற்றும் சட்டத்தரணி கனக ஈஸ்வரன், சநதிப்புக்கள் தொடர்பில் எங்குமே பேசவில்லை.

அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து பயணிக்கும் வகையில் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் சுமந்திரன் புலம்பெயர் சமூகத்திடம், கூறியிருந்தார். ஆனால், இறுதியில் அனைத்துமே புஸ்வாணமானது. தற்போது வெளியாகியுள்ள மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையை எடுத்து நோக்கினால், அமெரிக்கா தொடர்பான அனைத்துக் கணிப்புக்களும் தவறென்று நிரூபணமாகிவிட்டது. ஏனெனில், தற்போது வெளியாகியிருக்கும் பிரேரணை நகலின்படி குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில் அதில் முக்கியமான மாற்றங்கள் இடம்பெறவில்லை. தமிழர் தரப்புக்களின் கோரிக்கைகள் பெரிதாகக் கருத்தில் கொள்ளப்படவில்லை. இணையனுசரணை நாடுகளின் பிரதிநிதிகளின் உரைகளிலும் வழமையான சொற்களே மீளவும் உச்சரிக்கப்பட்டிருக்கின்றன. தற்போது, ஆகக் குறைந்தது, அரசியல் அதிகாரத்தை பகிர்ந்தளித்தல் - என்னும் விடயத்தையாவது செயல்பாட்டு பந்தியில் சேர்க்கலாமா என்னும் முயற்சியில் சில புலம்பெயர் அமைப்புக்கள் ஈடுபட்டு வருகின்றன. அதுவும் நடைபெறுமா என்பது கேள்விக்குறிதான்.

அமெரிக்கா மீளவும் மனித உரிமைகள் பேரவையில் இணைந்திருக்கும் நிலையில், அமெரிக்கா சில தலையீடுகளை செய்யலாமென்னும் எதிர்வுகூறல்களை பலரும் வெளியிட்டிருந்தனர். ஆனால், எதிர்பார்த்தது போன்று அமெரிக்கா பிரத்தியேகமான தலையீடுகளை செய்யவில்லை. அமெரிக்காவின் உலகளாவிய கரிசனையென்னும் வகையில், மனித உரிமைகளை பாதுகாத்தல் என்னும் விடயத்தையே அது தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழர் பிரச்னையில் – குறிப்பாக தமிழ் மக்களுக்கு ஓர் உறுதியான அரசியல் தீர்வை வழங்க வேண்டுமென்னும் கோரிக்கையை அமெரிக்கா இதுவரையில் வெளிப்படுத்தியதில்லை.

நாட்டின் அனைத்து மக்களின் மனித உரிமைகளும் பாதுகாக்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கையையே தொடர்ந்தும் முன்வைத்து வருகின்றது. குறிப்பாக 'தமிழ் மக்கள்' என்னும் விடயத்தைக்கூட அமெரிக்க இராஜதந்திர தரப்பினர் இதுவரையில் உச்சரித்ததில்லை. சிறுபான்மை என்னும் அடிப்படையிலேயே விடயங்கள் நோக்கப்படுகின்றன. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை அழுத்திக் குறிப்பிடும் ஒரேயொரு நாடாக இந்தியா மட்டுமே இருக்கின்றது. இதற்கு இந்திய - இலங்கை ஒப்பந்தமே பிரதான காரணமாகும். சுமந்திரன் கூறியது போன்று, அமெரிக்காவும் இந்தியாவும் தமிழர் பிரச்னையை ஒரு நேர் கோட்டில் அணுகியிருந்தால், இந்தியாவின் நிலைப்பாட்டுடன் அல்லவா அமெரிக்கா நின்றிருக்க வேண்டும். ஆனால், நிலைமைகளை அவதானித்தால் அவ்வாறான நகர்வுகளை காணமுடியவில்லை.

எனவே, அமெரிக்கா தமிழர் பிரச்னையில் அதிகம் தலையீடு செய்யும் என்பது ஒரு தவறான பார்வையாகும். ஓர் உலக சக்தியென்னும் வகையில், இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை தீர்மானிக்கும் பெரும்பான்மை மக்களான சிங்கள மக்களை அதிகம் விலகிச் சென்றுவிடாத வகையில்தான் அமெரிக்காவின் அணுகுமுறை இருக்கும். எனவே, அமெரிக்காவின் தமிழர்களுக்காக தலையிடும் ஆர்வம் மிகவும் வரையறுப்பட்டது. இதனை விளங்கிக் கொள்ளாமல் தேவையற்ற வகையில் மக்கள் மத்தியில் நம்பிக்கையூட்டுவதில் பயனில்லை.

ஆனால், இலங்கையின் ஆட்சி அதிகாரம் தொடர்பிலும் – அது எவ்வாறானவர்களின் கையிலிருக்க வேண்டும் என்பதிலும் அமெரிக்காவுக்கு தெரிவுகள் இருக்கலாம். அது அமெரிக்காவின் உலகளாவிய ஆர்வத்துடன் தொடர்புபட்டது. எனவே, தமிழர்கள் என்னும் அடிப்படையில் அமெரிக்கா விடயங்களை பார்ப்பதற்கான தேவைப்பாடு இல்லை. இதுவரையில் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படவில்லை. ஒருவேளை அவ்வாறான தேவை ஏற்பட்டால் அமெரிக்கா கூடுதல் ஆர்வத்தையும் காண்பிக்கலாம் – ஆனால், அவ்வாறானதொரு சூழலில் கூட இந்தியாவின் ஆர்வமே பிரதானமாக இருக்கும். இந்தியாவின் ஆலோசனையின்றி மேற்குலகம் இந்தப் பிராந்தியத்தில் தலையீடு செய்வது இயலாத காரியமாகும்.

# மத மாற்றப் பிரசாரத்தை தடுத்து நிறுத்த வேண்டும்!

## சிவசேனை அமைப்பு முறைப்பாடு - கோரிக்கை

*யாழ்ப்பாணம், செப். 23*

கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரி மைதானத்தில் மத மாற்றப் பிரசாரம் நடைபெறவுள்ளது. சுற்றுலா வீசாவில் நாட்டுக்குள் நுழைந்து மத மாற்றப் பிரசாரத்தில் ஈடுபடுவது சட்டவிரோதமானது. இதனை பொலிஸார் தடுத்து நிறுத்த வேண்டும். அத்துடன், இந்த பிரசாரக் கூட்டத்துக்கு வழங்கப்பட்ட அனுமதியை கல்லூரி அதிபர் இரத்து செய்ய வேண்டும். இல்லையேல் அவருக்கு எதிராகவும் போராட நேரிடும் என்று ஈழம் சிவசேனை அமைப்பு எச்சரித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின், சிறீந்திரன், செயமாறன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

இலங்கைக்கு வருகின்ற பயணிகள் 99வீதத்தினர் சுற்றுலாப் பயணிகள். சுற்றுலாவில் பலவகையினர் உள்ளனர். இதில், சுற்றுலாவுக்கு என நுழைவு உரிமம் (வீசா) வாங்கி இலங்கைக்குள் நுழைகின்ற எவரும் வேறு எந்த பணியிலும் ஈடுபட முயலக் கூடாது. வேலைவாய்ப்பு, பணி, பதவி எதையும் ஏற்கக் கூடாது. ஊதியம் பெறக்கூடாது. அதற்கான உரிமம் வேலை வாய்ப்பு நுழைவு உரிமம். இதேபோன்று, வணிகம், கல்விக்கு நுழைவு உரிமம் உள்ளது. இவை தவிர வேறு நோக்கங்களுக்கு இலங்கைக்குள் வர நுழைவு உரிமம் இல்லை.

பொதுவாக எந்த நாட்டிலும் இந்த நடைமுறை உண்டு. சுற்றுலா நுழைவு உரிமத்தைப் பெற்ற ஒருவர் இலங்கைக்குள் வந்து மதமாற்ற முயற்சிகளில் ஈடுபடுகிறார் என்றால் சட்டத்துக்கு அமைய அது குற்றவியல் குற்றம். இவ்வாறு கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் இருந்து மோகன் இலாசரசர் என்பவர் வந்து, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், கல்முனை ஆகிய மூன்று இடங்களில் மத மாற்ற முயற்சிகளில் ஈடுபட்டார் என்பதற்காக, அவரைக் குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தார் நாட்டை விட்டு வெளியேற்றினர். மீண்டும் இலங்கைக்கு வராது தடுத்துள்ளனர்.

சுற்றுலா நுழைவு உரிமத்தில் இலங்கைக்குள் மதம் பரப்பும் - மதம் மாற்றும் முயற்சிகளில் மோகன் இலாசரசர் ஈடுபடுகிறார் என்ற செய்தியை பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்தவர் சிவ சேனையின் தலைவர் மறவன்புலவு க சச்சிதானந்தன்.

அப்போது இருந்த ஆளுநர் சுரேன் இராகவன் அப்போதைய பொலிஸ் அத்தியட்சகர் துமிந்த இருவருமாக அவரை உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்றினர். இதனால் யாழ்ப்பாணத்திலும் கல்முனையிலும் அவரால் மதம் பரப்பவோ மதமாற்றவோ முடியவில்லை.

இப்பொழுது அமெரிக்க குடிமகனான அலெக்ஸ் என்பவர் சுற்றுலா நுழைவு உரிமத்துடன் யாழ்ப்பாணம் வருகிறார். கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் மதம் பரப்புகிறார் -மதம் மாற்றும் நிகழ்ச்சிகளில் ஈடுபடுகிறார்.

சுவரொட்டிகள் வழியாக செய்தி தெரிந்ததும் வட மாகாண ஆளுநர், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சகர் யாவரிடமும் கடிதம் வழி செய்தி சொல்லி உள்ளோம். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் முறையிட்டுள்ளோம்.

சட்டத்தை மீறி, தாம் வந்த நோக்கத்தை விட்டு வேறு நோக்கங்களுக்காகப் பணி புரியும் ஒருவரை, அரச வளாகமான கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் பேசி, மதம் பரப்பி, மதமாற்றி, நோயாளிகளைக் குணமாக்குவதாகப் பொய் சொல்லி ஏமாற்ற அரசு இடம் கொடுக்காது. அரசு வளாகத்தில் சட்ட மீறலில் ஈடுபட்டு அவர் பேச முடியாது. மதம் பரப்ப முடியாது. மதம் மாற்ற முடியாது. நோயாளிகளைக் குணப்படுத்துவதாக ஏமாற்ற முடியாது.

அவர் பங்கேற்கும் மதம் பரப்பும் மதம் மாற்றும் ஏமாற்றுப் பணி நிகழ்ச்சிக்கு உரிமத்தை மீளப் பெறுமாறு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வரிடம் சிவ சேனை கேட்டுள்ளது. அங்குள்ள மாணவர்களே அந்த நிகழ்ச்சியைத் தடுக்குமாறு முதல்வரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

பொலிஸாரும் தொழில்நுட்பக் கல்லூரியினரும் சட்டத்தை மீறுவதற்கு ஆதரவாக நடந்தால், சட்டம் ஒழுங்கை மீறுவோரைத் தண்டிக்குமாறும் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வரைத் தண்டிக்குமாறும், சைவ மாணவர்களும் சைவ அடியார்களும் போராட்டத்தில் ஈடுபடுவர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். (ஐ)

# பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீள ஆதரவு அளிப்போம்

## அவுஸ்திரேலிய தூதுவர் தெரிவிப்பு

*கொழும்பு, செப். 23*

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியிலி ருந்து மீள்வதற்குத் தேவையான ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாக அவுஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீ வன்ஸ் தெரிவித்துள்ளார்.

அஸ்கிரிய பீடாதிபதிகளை நேற்று வியாழக்கிழமை காலை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கும்போதே அவர் இவ்வாறு கூறினார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
செயலில் கூடுதல் கவனம் தேவை.நீண்ட முயற்சிக்குப் பின் எண்ணம் நிறைவேறும். தாய்வழி உறவுகள் உதவி புரிவர்.உறவுகள் வழியே பிரச்னையை சந்தித்தாலும் சாதுர்யமாக சமாளிப்பீர்கள்.

**இடபம்**
முயற்சியில் வெற்றி காண்பீர்கள். நண்பர்கள் உதவி செய்வர். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். சொத்து வாங்கும் முயற்சி பலிதமாகும்.எதிரிகள் விலகிச் செல்வர். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும்.

**மிதுனம்**
பேச்சில் கவனம் தேவை. நிதானமாக செயல்படுவதால் நன்மை அதிகரிக்கும். அமைதி காப்பது நல்லது.குடும்பத்தினரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த வருவாய் வரும்.

**கடகம்**
வேலைப்பளு அதிகரிக்கும். குழப்பம் ஏற்படும். செயலில் கவனம் தேவை. மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**சிம்மம்**
சிலர் புதிய வாகனம் வாங்குவர். அலைச்சல் அதிகரிக்கும். திடீர் செலவு ஏற்படும். சிந்தித்து செயல்படுங்கள். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்ட பிரச்னை விலகும். நவீன பொருட்கள் வாங்குவீர்கள்.

**கன்னி**
எதிர்பார்த்த வருமானம் வரும். வியாபாரத்தில் நீங்கள் மேற்கொள்ளும் முயற்சி வெற்றியாகும். பொருளாதார நெருக்கடி தீரும்.நிதிநிலை உயரும். சொத்து வாங்கும் முயற்சி இன்று நிறைவேறும்.

**துலாம்**
முயற்சிக்கு நண்பர்கள் துணைபுரிவர். வேலைக்காக நீங்கள் மேற்கொண்ட முயற்சி இழுபறியாகும். அந்நியர்களிடம் எச்சரிக்கை அவசியம்.தொழிலில் போட்டி அதிகரிக்கும். சிந்தித்து செயல்பட வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
எதிர்பார்ப்பு நிறைவேறும். முன்னோர் அருளால் குடும்பத்தில் சுபநிகழ்ச்சிக்குரிய அறிகுறி உண்டாகும். திட்டமிட்டு செயல்பட்டு எதிர்பார்த்த நன்மை அடைவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**தனுசு**
வெளியூர் பயணத்தால் சங்கடம் உண்டாகும். முயற்சிகள் இழுபறியாகும்.எதிர்பார்ப்பில் சங்கடமான நிலை ஏற்படும். பண நெருக்கடியால் குழப்பம் தோன்றும். கடன் தொல்லை உண்டாகும்.

**மகரம்**
எண்ணம் நிறைவேறும். விரும்பியதை அடைவீர்கள். வாழ்க்கைத் துணையால் முயற்சி வெற்றியாகும். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். விருப்பம் நிறைவேறும்.

**கும்பம்**
எதிரி தொல்லை மறையும். விலகிச் சென்றவர்கள் உங்களைத் தேடி வருவர். திட்டமிட்டு செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். அந்நியரால் உதவி கிடைக்கும். முயற்சி வெற்றியாகும்.

**மீனம்**
சிலருக்கு இடமாற்றம் ஏற்படும். பிள்ளைகளால் கவலை ஏற்படும். பணியிடத்தில் ஏற்பட்ட பிரச்னையை சரி செய்வீர்கள். அலுவலகத்தில் செல்வாக்கு உயரும். நீண்டநாள் முயற்சி ஒன்று நிறைவேறும்.

# வரும் சட்ட மன்றத் தேர்தலில் தி. மு. க. பரந்துபட்ட கூட்டணி!

## பா.ம.க., தே.மு.தி.க., மக்கள் நீதி மய்யம் இணையும்?

*சென்னை, செப். 23*

எதிர்வரும் சட்ட சபைத் தேர்தலில், பா. ம. க., - தே. மு. தி. க., மற்றும் மக்கள் நீதி மய்யம் கட்சிகளை கூட்டணியில் சேர்க்க தி. மு. க., திட்டமிட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

சட்டசபைத் தேர்தலில், பா. ஜ. க.வுடன் கூட்டணி இல்லை. தேசிய அளவில் பா. ஜ. க. கூட்டணியை எதிர்கொள்ள, எல்லோரும் ஒன்று சேர்ந்தால்தான் முடியும். தனித்தனியாக போனால் அது நிச்சயமாக பாதிக்கும்“ என, முதல்வர் ஸ்டாலின் சமீபத்தில் தெரிவித்தார். இதன் வாயிலாக, சட்ட சபைத் தேர்தலில், தமிழகத்தில் பலம் வாய்ந்த அணியை உருவாக்க, முதல்வர் ஸ்டாலின் திட்டமிட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இது குறித்து, கட்சி வட்டாரங்கள் கூறியவை வருமாறு,

கடந்த சட்ட சபைத் தேர்தலில், தி.மு.க., கூட்டணியில் இடம்பெற்றிருந்த கட்சிகளில், பாரிவேந்தரின் இந்திய ஜனநாயக கட்சியை தவிர, மற்ற கட்சிகள் தொடர்கின்றன. ஆனால், தொகுதி பங்கீட்டில் சில மாற்றங்களை செய்து அணியை பலப்படுத்த கூடுதலாக சில கட்சிகளையும் சேர்க்க தி.மு.க., தலைமை திட்டமிட்டுள்ளது.

கடந்த சட்டசபை தேர்தலில் தேர்தலில், காங்கிரஸுக்கு தமிழகத்தில், 9 தொகுதிகளும், புதுச்சேரி தொகுதியும் ஒதுக்கப்பட்டன. அதில் தமிழகத்தில் 8 தொகுதிகளும், புதுச்சேரியிலும் காங்கிரஸ் வெற்றி பெற்றது. வரும் சட்ட சபை தேர்தலில் காங்கிரஸுக்கு தமிழகத்தில், 4 தொகுதிகளுடன் புதுச்சேரியும் சேர்த்து ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு, பா.ம.க., - தே.மு.தி.க., மற்றும் மக் கள் நீதி மய்யம் ஆகிய 3 கட்சிகளையும் சேர்த்து, அணியை பலப்படுத்த தி. மு. க., திட்டமிடு வதுதான் காரணம்.

தேசிய அளவில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணையவில்லை என்றாலும், தி.மு.க. தலைமையில் தமிழகத்தில் முக்கிய கட்சிகள் ஒன்று சேரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது -என்று கூறப்பட்டது. (ஐ)

# தமிழகம் முழுவதும் திங்களன்று பா. ஜ. கட்சியினர் போராட்டம்!

*சென்னை, செப். 23*

பாரதிய ஜனதா (பா. ஜ. ) கட்சியினரின் கைதை கண்டித்து எதிர்வரும் திங்கட்கிழமை தமிழகம் முழுவதும் சிறை நிரப்பும் போராட்டம் நடைபெறும் என்று அந்தக் கட்சியின் தமிழக தலைவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

தமிழகத்தில் தற்போது நடைபெற்று வரும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், தமிழரின் மாண்பையும் தமிழரின் மரபையும் தமிழரின் தொன்மையையும் இறை நம்பிக்கையையும், இழிவுபடுத்தும் செயல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழகத் தாய்மார்களை, தமிழினத்தை அவமதிக்கும் கருத்திற்கு. கோவை மாவட்டத்தில் ஜனநாயக ரீதியாக, எதிர்ப்பு தெரிவித்த, பா. ஜ. க. தொண்டர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை கண்டித்து வரும் 26ஆம் திகதி, அறவழியில், சிறை நிரப்பும் போராட்டம் நடத்தப்படும்.

தமிழக பொலிஸார் தி. மு. கவின் ஏவல் துறையாக செயல்படுகிறது. தமிழ் இனத்தை, தமிழ்ப் பெண்களை இழிவுபடுத்தி கேவலப் படுத்தும். ஆ. ராசா போன்ற ஆளும் கட்சி நபர்களை எல்லாம் கண்டுகொள்ளாத பொலிஸார், அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பாரதிய ஜனதா கட்சியின் தொண்டர்களையும் நிர்வாகிகளையும் பொய் வழக்கில் கைது செய்து அச்சுறுத்துகிறார்கள். சில தி. மு. க. வழக்கறிஞர்கள் நீதிபதிகளையே அச்சுறுத்தி வருகிறார்கள். தி. மு. கவின் அராஜகமும் ஆளும் கட்சி என்பதால் நடத்தும் அத்துமீறலும், கண்டிக்கத்தக்கது. (ஐ)

# தி. மு. க. துணை பொது செயலாராக கனிமொழியை நியமிக்க கோரிக்கை

*சென்னை, செப். 23*

சுப்புலட்சுமி ஜெகதீசனுக்குப் பதில் கனிமொழி கருணாநிதியை துணை பொதுச் செயலளாராக நியமிக்க வேண்டும் என்று தி. மு. க. கட்சியின் தலைமையிடம் தொண்டர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.



திராவிட முன்னேற்ற கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர்களில் ஒருவரான சுப்பு லட்சுமி ஜெகதீசன் கடந்த 20ஆம் திகதி அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாக அதி காரபூர்வமாக அறிவித்தார்.

இந்நிலையில் சுப்புலட்சுமி ஜெகதீசன் வகித்து வந்த துணை பொதுச்செயலாளர் பதவி அடுத்து யாருக்கு கிடைக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பு தி. மு. கவினர் இடையே எழுந்துள்ளது.

தி. மு. கவை பொறுத்தவரையில் தற்போதுள்ள துணைப் பொதுச் செயலாளர்களின் தாழ்த்தப்பட்டோர் பொது மற்றும் பெண் என வழங்கப்பட்டுள்ளது. அதில், பெண் உறுப்பினரான சுப்புலட்சுமி ஜெகதீசன் தனது ஓய்வை அறிவித்துள்ள நிலையில் அந்த இடத்திற்கு மீண்டும் ஒரு பெண் நிர்வாகியை துணைப் பொதுச் செயலாளராக நியமனம் செய்ய வேண்டிய சூழலே உள்ளது.

இந்நிலையில் அடுத்த துணைப் பொதுச் செயலாளர் யார் என்ற கேள்வி வலுவாக எழுந்துள்ள நிலையில், அந்த இடத்தில் தி. மு. கவின் மகளிர் அணி செயலாளரும் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதியை நியமிக்க வேண்டும் என்று அவருடைய ஆதரவாளர்கள் கட்சி தலைமையிடம் கோரிக்கை வைத்துள்ளனர். (ஐ)

# பா. ஜ. க. தலைவர் தமிழகம் வருகை!

*மதுரை, செப். 23*

பா. ஜ. கட்சியின் நாடளாவிய தலைவர் ஜே. பி. நட்டா 2 நாள் பயணமாக தமிழகம் வந்துள்ளார். மதுரை விமான நிலையத்தில் அவரை பா. ஜ. கட்சியினர் வரவேற்றனர்.

தமிழகத்தில் பல்வேறு கட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் ஜே. பி. நட்டா தமிழகத்தில் அந்தக் கட்சியின் செயல்பாடுகள் தொடர்பில் ஆராய்வார். அத்துடன் சில முக்கிய முடிவுகளையும் எடுப்பார் என்று அறிய வருகின்றது. (ஐ)

# இனிப்பு வகைகளின் விலை குறைக்க முடிவு

கொழும்பு, செப். 23

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இனிப்பு வகைகளின் விலையை 10 முதல் 13 வீதத்தால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மிட்டாய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, அனைத்து தயாரிப்பு வகைகளிலும் தின்பண்டங்களின் விலை குறைவடையும் என அதன் தலைவர் எஸ்.எம்.டி.சூரியகுமார தெரிவித்தார்.

இரண்டு முக்கிய பொருட்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், இதனால் சந்தையில் இனிப்புகளின் விலையைக் குறைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இனிப்பு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் சீனியின் விலை கிலோ ஒன்றுக்கு 40 ரூபாவாலும், தாவர எண்ணெய் கிலோ ஒன்றின் விலை 250 ரூபாவாலும் குறைந்துள்ளதாக அவர் கூறினார். (அ)

# மாணவியின் பகல் உணவாக தேங்காய்!

## பசிக் கொடுமையால் இந்த நிலை

கொழும்பு, செப். 23

இலங்கையின் மேல் மாகாண மினுவாங்கொடை கல்வி வலயத்திற்குட்பட்ட இடைநிலைப் பாடசாலையொன்றில் தரம் 9 இல் கல்வி கற்கும் பாடசாலை மாணவியொருவர் நேற்று முன்தினம் மதிய உணவிற்காக தேங்காயை உட்கொண்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

குறித்த மாணவி பாடசாலையில் மாணவத் தலைவியாகவும் செயற்படுகிறார். குறித்த மாணவியின் தந்தை பிரதேசத்தில் பணியாற்றும் ஒரு தொழிலாளி என்றும் அவரது தாயார் ஒரு இல்லத்தரசி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்து கவலை தெரிவித்த ஆசிரியர்கள் குறித்த மாணவிக்கு மதிய உணவை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, குறித்த பாடசாலையில் தரம் ஒன்று முதல் தரம் ஐந்தாம் வகுப்பு வரை மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

சம்பவ தினத்தன்று மாணவர்களுக்கு சோறு மற்றும் பருப்பு கறி தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் தரம் மூன்று மாணவர்கள் இரண்டாவது முறையாகவும் சோறு வேண்டும் என்று கேட்டுள்ளனர். ஆனால் மதிய உணவு தயாரிக்கும் பெண், சோறு மட்டுமே இருப்பதாகவும் கறி இல்லையென்றும் கூறினார்.

இந்த நிலையில் கறி எதுவும் இல்லாமல் குறித்த மாணவர்கள் சோறு மாத்திரம் உட்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 92 முக்கிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது!

## ஒப்புக்கொள்கிறார் கெஹலிய

கொழும்பு,செப்.23

**அத்தியாவசியமான 383 மருந்துகளில் 92 மருந்துகளுக்கு தட்டுப் பாடு இருப்பதாக ஒப்புக்கொண்ட சுகாதார அமைச்சர் கெஹலிய ரம் புக்வெல, 14 அத்தியாவசிய மருந்துகள் கையிருப்பில் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.**



எவ்வாறாயினும், இந்த 14 முக்கிய மருந்துகள் மருத்துவ வழங்கல் பிரிவில் கையிருப்பில் இல்லை என்றும், அவை சுற்றளவில் கிடைக்கின்றன என்றும் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் டீ.வீரசிங்கவின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், அத்தியாவசிய மருந்துகளின் தட்டுப்பாடு கட்டுப்பாட்டை மீறவில்லை என்றும், அத்தகைய மருந்துகளுக்கு மாற்று மருந்துகள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மருந்துப் பற்றாக்குறையை விரைவில் தீர்க்க முடியும் என்றும், மூன்று முதல் ஆறு மாதங்களுக்கு மருந்து இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி கவிரத்ன எழுப்பிய மற்றுமொரு கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், சிறுவர்கள் மத்தியில் போசாக்கு குறைபாடு மற்றும் ஏனைய பிரச்னைகள் தொடர்பில் ஊடகங்கள் நாட்டில் நிலவும் நிலைமையை பெரிதாக்குவதாக தெரிவித்தார்.

ஹெபரின் ஊசி தற்போது கையிருப்பில் இல்லை என தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அசோக் அபேசிங்கவுக்கு பதிலளித்த அமைச்சர் ரம்புக்வெல, தேவைப்பட்டால் குப்பிகளை விமானத்தில் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். (அ)

# டிசெம்பர் வரை சந்தைகளுக்கு புதிய காஸ் சிலிண்டர்கள் வராது

கொழும்பு, செப். 23

எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை உள்நாட்டு சந்தைகளுக்கு புதிய எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படமாட்டாது என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள், இலங்கையில் வசிக்கும் அவர்களது உறவினர்களுக்காக புதிய எரிவாயு சிலிண்டர்களை முன்பதிவு செய்யும் நடைமுறையின் காரணமாக அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதே இதற்கு காரணமாகும்.

நாடு எதிர்நோக்கியுள்ள டொலர் நெருக்கடிக்கு தீர்வாக லிட்ரோ நிறுவனம் அண்மையில் இந்த நடைமுறையை அறிமுகப்படுத்தியது.

அதற்கமைய, வெளிநாடுகளில் உள்ள சில இலங்கையர்கள் டொலரை செலுத்தி புதிய சிலிண்டர்களை முன்பதிவு செய்துள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மக்கள் எரிவாயுவை சிக்கனமாக பயன்படுத்துவதன் காரணமாக, நாளாந்த எரிவாயு தேவை சற்று குறைவடைந்துள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் குறிப்பிட்டார். (அ)

# அவுஸ்திரேலியாவிடமிருந்து 600 மெற்றிக் தொன் அரிசி!

கொழும்பு, செப். 23

அவுஸ்திரேலியாவினால் நன்கொடையா அளிக்கப்பட்ட சுமார் 15 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அரிசி இலங்கையை வந்தடைந்துள்ளது.

இந்த அரிசி தொகை தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவில் விநியோகிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

600 மெற்றிக் தொன் அரிசி இந்த நன்கொடையில் உள்ளடங்குகிறது. மேலும் அரிசி, பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய் என்பனவும் விரைவில் நாட்டுக்கு அவுஸ்திரேலியாவினால் வழங்கப்படவுள்ளன.



அவுஸ்திரேலியாவும் இலங்கையும் பல தசாப்தகால நட்பைப் பகிர்ந்து கொள்கின்றன. இந்த பங்களிப்பு பாரிய நெருக்கடியின் போது எங்களின் நல்லெண்ணத்தின் விரிவாக்கமாகும் என்று இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் போல் ஸ்டீபன்ஸ் தெரிவித்துள்ளார். (அ)

# பெரிய வெங்காயத்தின் அறுவடையில் வீழ்ச்சி!

கொழும்பு, செப். 23

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், சிறு போகத்தில் உள்ளூர் பெரிய வெங்காயத்தின் அறுவடை 10 இலட்சம் கிலோ கிராமினால் குறைவடைந்துள்ளதாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் இந்த காலப் பகுதியில் சிறு போகத்தில் 10 தொடக்கம் 15 இலட்சம் கிலோ கிராம் பெரிய வெங்காயம் நாளாந்தம் கிடைத்ததாக தம்புள்ளை பொருளாதார மத்திய நிலைய வர்த்தக சங்கத்தின் தலைவர் சாந்த ஏக்கநாயக்க தெரிவித்தார்.

எனினும், இந்த தடவை சுமார் 2 இலட்சம் கிலோ கிரோம் பெரிய வெங்காயம் மாத்திரமே தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு நாளாந்தம் கிடைப்பதாக அவர் கூறினார்.

ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் உற்பத்திச் செலவு 250 ரூபாவாக காணப்படுகின்ற நிலையில், விவசாயிகளுக்கு ஒரு கிலோ கிராமிற்கு 80 தொடக்கம் 120 ரூபா வரையே கிடைப்பதாக சாந்த ஏக்கநாயக்க மேலும் குறிப்பிட்டார். (அ)

# பல்கலைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் கவனத்துக்கு!

கொழும்பு, செப். 23

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய, பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கும் போது, ஒருநாள் சேவையின் கீழ் பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சான்றிதழை இணைக்க வேண்டியது அவசியம் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில், இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்பும் போது பாடசாலை பரீட்சார்த்திகள் எனில், பாடசாலை அதிபரினால் வழங்கப்படும் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்களை மாத்திரம் இணைப்பது போதுமானதாகும்.

அத்துடன், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தில், பணம் செலுத்திப் பரீட்சை பெறுபேறுகளை, பெற்றுக்கொண்டமைக்கான பத்திரத்தை இணைத்து விண்ணப்பிப்பது போதுமானதாகும் எனவும் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைகள் பெறுபேறுகளை உறுதிப்படுத்திக் கொள் வதற்காக பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகப்பூர்வ இணையத்தளமான https://www.doenets.lk க்கு பிரவேசிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# அமெரிக்காவிடமிருந்து இலங்கைக்கு அவசர மருந்து, மருத்துவ பொருட்கள்!

## 7 இலட்சம் டொலர் பெறுமதியானவை

கொழும்பு, செப். 23

**அமெரிக்காவில் இருந்து 7 இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக பெறுமதியுடைய அவசர மருந்துகள் மற்றும் மருத்துவ பொருட்கள் இலங்கைக்கு வழங்கப்படுகின்றன.**

அமெரிக்காவில் உள்ள உலகின் முன்னணி மருத்துவ நிறுவனம் ஒன்றினால் இந்த மருந்து பொருட்கள் வழங்கப்படுவதாக அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிக்கை ஒன்றை விடுத்து அறிவித்துள்ளது.

இதன்படி, இலங்கைக்கு 7 இலட்சத்து 73 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மருந்து மற்றும் மருத்துவ பொருட்கள் வழங்கப்படுவதோடு இது இலங்கை ரூபாவில் 279 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியாகும்.

இந்த மருந்து மற்றும் மருத்துவ பொருட்களை கையளிப்பதற்கான நிகழ்வு அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இடம்பெற்றுள்ளது. (அ)



# விசேட புத்தக கண்காட்சியை இலங்கையில் நடத்த ஏற்பாடு!

கொழும்பு, செப். 23

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள அரிய மற்றும் வரலாற்று மதிப்புமிக்க புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் உள்ளடங்கிய விசேட புத்தகக் கண்காட்சியொன்றை இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்த ஏற்பாடு செய்திருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி நேற்று முற்பகல் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் நடைபெற்று வரும் 23 ஆவது கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சியை பார்வையிடுவதற்காக சென்றிருந்தார்.

இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்படவுள்ள புத்தகக் கண்காட்சிக்கு இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் ஒத்துழைப்பை பெற எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று காலை கண்காட்சி வளாகத்திற்கு சென்ற ஜனாதிபதி , இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் சமந்த இந்தீவர உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இலங்கை மன்றக் கல்லூரியின் தலைவர் சமன் அத்தாவுடஹெட்டி, புத்தக வெளியீட்டாளர்கள் சங்க உறுப்பினர்களான விஜித யாப்பா, எச்.டி. பிரேமசிறி, ஆரியதாச வீரமன், அதுல ஜெயக்கொடி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இந்த வருட புத்தகக் கண்காட்சியில் 400 இற்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புத்தக வெளியீட்டாளர்களின் விற்பனைக் கூடங்கள் இடம்பெற்றுள்ளன. ஜனாதிபதி அவர்கள் அவற்றை நேரில் சென்று பார்வையிட்டதுடன் புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் எழுத்தாளர்களுடனும் சிறிது நேரம் உரையாடினார்.

கண்காட்சி வளாகத்திற்கு வருகை தந்திருந்த பொது மக்களுடன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார். (அ)

## சூதாட்டத்தில் ஈடுபட்ட நான்கு பெண்கள் கைது!

கொழும்பு, செப். 23

பணம் வைத்து சூதாடிய நான்கு பெண்கள் ,அம்பலங்கொடை, குலிகொட என்ற இடத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கணவன்மாரிடம் குழந்தைகளை ஒப்படைத்துவிட்டு இந்த நான்கு பெண்களும் பணம் வைத்து சூதாடுவதற்கு சென்றிருந்தபோது தம்மிடம் சிக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பணம் வைத்து சூதாடும் பெண்கள் அதிகமாக அம்பலங்கொடை பிரதேசத்தில் காணப்படுவதாக தெரிய வந்தையடுத்து பொலிஸாரர் இது குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளனர். (அ)

## மலேஷியா சென்ற அமைச்சர் நஸீர் மலாக்கா மாநில ஆளுநருடன் பேச்சு

கொழும்பு, செப். 23

கொரியாவில் இடம்பெற்ற காலநிலை மாநாட்டில் கலந்துகொண்டு நாடு திரும்பும் வழியில், சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் மலேஷியாவுக்கு விஜயம் செய்தார்.

அங்கு மலாக்கா மாநில முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய ஆளுநரும் தனது நெருங்கிய நண்பருமான ரான் சிறி மொஹ்ட் அலிருஸ்தானை அமைச்சர் நஸீர் அஹமட் சந்தித்து கலந்துரையாடினார்.

மலாக்கா மாநிலத்தில் இலங்கையின் கலாசார நிலையம் ஒன்றை நிறுவுதல், இலங்கை மாணவர்களுக்கு கல்வி வாய்ப்புக்களை வழங்குதல், விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல் மற்றும் இலங்கையில் உல்லாசப்பயணத்துறையை விருத்தி செய்வது மலேசியாவின் ஒத்துழைப்பு பெறுவது தொடர்பிலும் இச்சந்திப்பில் மலாக்கா ஆளுநருடன் அமைச்சர் நஸீர் அஹமட் கலந்துரையாடினார்.

(அ)

# பாடசாலைகளில் உணவின்றி மயக்கமடையும் மாணவர்கள்

## பாராளுமன்றில் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 23

அநுராதபுரம் மாவட்டத்தின் விளச்சிய பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட 3 பாடசாலைகளைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட மாணவர்கள், உணவு இன்மையினால் நேற்று முன்தினம் மயக்கமடைந்து விழுந்துள்ளதாக நேற்று பாராளுமன்றில் தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.பி.எஸ் குமாரசிறி இதனை தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர், குறித்த பிரதேச செயலகத்தின் சித்தார்த்த மகா வித்தியாலயம், கிம்புலாவ காமினி வித்தியாலயம் மற்றும் ஆனந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

தாம் பாடசாலை அதிபர்களை தொடர்புகொண்டு இதுபற்றி வினவியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், கம்பஹா - மினுவாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் தேங்காய் துண்டுகளை பகலுணவாக கொண்டுவந்ததாக கூறப்படும் விடயத்தையும் பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்தும், 60 ரூபாவுக்கு பாடசாலை மாணவர்களுக்கு பகலுணவு வழங்க முடியாது. எனவே உடனடியாக இது தொடர்பில் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு அவர் கோரினார்.

இதனையடுத்து கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, மினுவாங்கொடை பகுதியில் உள்ள குறித்த பாடசாலையில் 15 ஆசிரியர்கள் மட்டுமே உள்ளதாக குறிப்பிட்டதுடன், செய்திகளில் குறிப்பிட்டதைப்போன்று எந்த சம்பவங்களும் இடம்பெறவில்லை என்றும் கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் கேள்வியுற்றவுடன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டதாகவும், அதன்போது, மாணவர்கள் எவரும் அவ்வாறான பகலுணவை கொண்டுவந்த சம்பவங்கள் பதிவாகவில்லை என்று தெரிய வந்ததாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

மேற்படி, சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாடசாலையின் அதிபரை தான் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, மேற்படி விடயத்தை அவர் தெளிவுபடுத்தியதாக குறிப்பிட்ட அமைச்சர் அந்த தொலைபேசி உரையாடலைச் சபையில் ஒலிபரப்பினார்.

இதேவேளை, தானும் அதிபரை தொடர்புகொண்டதாக தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பொருளாதார நெருக்கடியை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு மக்களை திசை திருப்புவதற்கு சிலர் இவ்வாறாக தகவல்களை வெளியிடுவதாகக் கூறினார். (அ)

# மின்வெட்டு நேரத்தை மேலும் அதிகரிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, செப். 23

மின்வெட்டு நேரத்தை இரண்டு மணிநேரம் 20 நிமிடங்களாக அதிகரிக்குமாறு மின்சார சபை கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனால் இந்த கோரிக்கையை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு நிராகரித்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மின்சாரத் தடையை ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்க மின்சார சபை முன்வைத்த காரணங்கள் நியாயமானவை அல்ல என்பதாலேயே அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகத் தெரிவித்த ஜானக ரத்நாயக்க, தற்போதைய ஒரு மணித்தியாலம் 20 நிமிட மின் வெட்டை இன்றும் அமுல்படுத்த அனுமதியளிக் கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

(அ)

# மதுபானம், சிகரெட்டுகளுக்கு புதிய வரி முறைமை வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, செப். 23

எதிர்கால அரசாங்கத்தின் கீழ் முறையான வரி விதிப்புகளுக்கு உட்பட்டு மதுபானம் மற்றும் சிகரெட்டுகளுக்கு புதிய வரி முறையை அறிமுகப்படுத்தவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி கோரியுள்ளது.

தற்போது, மற்ற பொருட்களுடன் ஒப்பிடுகையில், மது மற்றும் சிகரெட்டுகளுக்கு மிகக் குறைந்த வரி விதிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றில் இதனை வெளிப்படுத்தினார்.

இந்த மது சிகரெட் உற்பத்தியாளர்கள் குறிப்பிட்ட சில அதிகாரிகளுக்கும், பல்வேறு அமைச்சர்களுக்கும் வரப்பிரசாதம், சலுகைகள், சுகபோகங்களை வழங்கி, குறைந்த சதவீத வரி விதித்து அதிக இலாபம் ஈட்டுவதாக பலராலும் குற்றம் சாட்டப்படுகிறது.

இந்த நிறுவனங்கள் கடந்த காலம் முழுவதும் இவ்வாறான முறையில் செயற்பட்டு வருவதாகவும், எதிர்காலத்தில் இது தொடர்பில் பல விசேட மான கருத்துக்களை வெளியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் தயாராகவுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# நாணய நிதியத்துடன் பேச்சுக்கு இலங்கை குழு அமெரிக்காவுக்கு!

## செப்ரெம்பர் 6ஆம் திகதி பயணமாகும்

**கொழும்பு, செப். 23**

**சர்வதேச நாணய நிதியத்தின் உத்தேச கடன் வசதிகள் தொடர்பில் அதன் அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்காக, இலங்கை பிரதிநிதிகள் குழுவொன்று அமெரிக்கா செல்லவுள்ளது.**

அடுத்த மாதம் 6ஆம் திகதி வொஷிங்டன் செல்லவுள்ள அவர்கள், அங்கு மேலதிக கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த கலந்துரையாடலில் மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட அரசாங்க பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

டொலர் நெருக்கடி காரணமாக பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள இலங்கைக்கு, 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் நீண்ட கால கடன் வசதிக்கான பணிக்குழாம் மட்ட உடன்பாடு அண்மையில் எட்டப்பட்டது.

இந்த தொகையானது 4 வருட காலப்பகுதியில் 8 தவணைகளாக இலங்கைக்கு வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள வெளிநாட்டுக் கடனை செலுத்துவது தொடர்பான மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் உடன்படிக்கைகள் மற்றும் முன்னேற்றம் குறித்தும் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளது.

அதன்படி, கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை இன்று முன்வைக்க நிதியமைச்சு திட்டமிட்டுள்ளது. (அ)

# ரயில்வே திணைக்களத்தில் ஊழியர்கள் பற்றாக்குறை

கொழும்பு, செப். 23

சுமார் 7,000 ஊழியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாகவும் இதனால் செயற்பாட்டு நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுமார் 21,000 ஊழியர்கள் பணிபுரிய வேண்டிய ரயில்வே திணைக்களத்தில் தற்போது 14,000 ஊழியர்கள் மாத்திரமே கடமைகளில் ஈடுபடுவதாக பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே எதிர்வரும் டிசெம்பர் மாதத்தில் 250 இற்கும் அதிக ஊழியர்கள் ஓய்வு பெற உள்ளதாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்குள் ஆளணிப் பற்றாக்குறைக்கு தீர்வு காணப்படாவிட்டால், எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ரயில்வே பணிகள் கடுமையாக பாதிக்கப்படும் என காமினி செனவிரத்ன குறிப்பிட்டார். (அ)

# அரச உத்தியோகத்தர்களின் ஆடைகளில் திடீர் மாற்றம்?

கொழும்பு, செப். 23

அரச உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வரும் போது பொருத்தமான அலுவலக உடைகளை அணிவது தொடர்பில் புதிய சுற்றறிக்கையை வெளியிட பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கையை தயாரிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன குறிப்பிட்டார்.

பெண்கள் அலுவலகங்களுக்குச் செல்லும்போது சேலை, ஒசரியா அல்லது அலுவலகத்திற்கு ஏற்ற உடை அணியலாம் என்று ஏற்கனவே சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சிலர் சுற்றறிக்கையின் முதல் பகுதியை மாத்திரம் அமுல்படுத்துவதாகவும், பொருத்தமான அலுவலக ஆடை என்றால் என்ன என்பதை மறந்து விட்டதாகவும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, தகுந்த அலுவலக உடையை அனுமதிக்க வேண்டும் என புதிய சுற்றறிக்கை வெளியிட முடிவு செய்யப்பட்டு, விரைவில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அமைச்சரவை அமைச்சின் கீழ் ஒதுக்கப்படும் ஒதுக்கீடுகள், இராஜாங்க அமைச்சர்கள் தொடர்பான செலவுகளுக்கு உரிய முறையில் பயன்படுத்தப்படவேண்டும் என்றும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 8ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்ட அமைச்சர்களுக்கு தனியான வரவு-செலவு திட்டம் எதுவும் இல்லை என நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டு சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் ஏற்கனவே சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இதன்படி, இராஜாங்க அமைச்சர்களின் செலவினங்களை, சம்பந்தப்பட்ட அமைச்சரவை அமைச்சின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளில் இருந்து இயன்றவரை பயன்படுத்தவேண்டும் என நிதியமைச்சு புதிய சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

அவ்வாறு செய்ய முடியாத சந்தர்ப்பங்களில், தேசிய வரவு செலவுத் திணைக்களத்திடம் மேலதிக ஒதுக்கீடுகள் கோரப்படவேண்டுமென நிதியமைச்சின் செயலாளர் விடுத்துள்ள சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஓய்வூதிய வயதை மாற்றியதால் 249 விசேட வைத்தியர்கள் ஓய்வு

## அமைச்சர் கெஹெலிய தகவல்

கொழும்பு, செப். 23

அரச ஊழியர்களின் ஓய்வூதிய வயதை 60 ஆக மாற்றியமையினால் 9 வீதமான விசேட வைத்தியர்கள் இந்த வருட இறுதிக்குள் ஓய்வு பெறவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, விசேட வைத்தியர்கள் குழுவொன்று ஒரேயடியாக ஓய்வு பெறுவதனால் சுகாதாரத்துறையின் முகாமைத்துவம் மற்றும் சேவைகளை வழங்குவதில் சிக்கல் நிலை உருவாகலாம் என கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர், இது இளம் மருத்துவர்களுக்கு சாதகமான பின்னணியை உருவாக்கும் என குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் உரையாற்றிய சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, “இலங்கையின் வைத்தியசாலை அமைப்பில் தற்போது 2,278 விசேட வைத்தியர்கள் கடமையாற்றி வருவதுடன் கட்டாய ஓய்வுபெறும் வயது 60 என்பதனால் விசேட அதிகாரிகள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் பின்வருமாறு ஓய்வுபெற உள்ளனர்.

அதன்படி, 222 சிறப்பு மருத்துவ அதிகாரிகள் மற்றும் 27 நிர்வாக மருத்துவ அலுவலர்கள் என மொத்தம் 249 பேர் இந்த ஆண்டு இறுதியில் ஓய்வு பெறவுள்ளனர்.

ஒரு சதவீதமாக, சிறப்பு மருத்துவ அதிகாரிகளின் எண்ணிக்கையில் சுமார் 9 வீதமான பேர் ஓய்வு பெறப் போகிறார்கள். எனவே காலியாக உள்ள மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களின் பாடப் பகுதிக்கு ஏற்ப உள் இடமாற்ற முறையை சமநிலைப் படுத்துவது சாத்தியமாகும்.

கூடுதலாக, 5 வருட வெளிநாட்டு விடுப்பு முறையின் கீழ், மேலும் 3வீத வைத்தியர்கள் வெளிநாடு செல்ல முடியும். அதே எண்ணிக்கை பொது மருத்துவ பதவிகளை உள்ளடக்கிய அமைப்பின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பயிற்சிக்காக அரசாங்கம் வருடத்திற்கு நிறையப் பணத்தைச் செலவிடுகிறது. மேலும் பயிற்சி பெறும் அதிகாரிகள் கட்டாய சேவைக் காலத்திற்கு உட்பட்டுள்ளனர்.

எனவே, ஓய்வுபெறும் வயதை 60ஆக மாற்றியமை இத்துறையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகத் தெரிகிறது. ஏனெனில் இது இளம் மருத்துவர்கள் தங்களுக்கு விருப்பமான பதவிகளைப் பெறவும் உள்நாட்டில் தகுதி வாய்ந்த மருத்துவர்கள் பதவி உயர்வு பெறவும் வாய்ப்பளிக்கிறது-என தெரிவித்தார். (அ)

# மீனவர்களுக்குத் தேவையான எரிபொருளை குறைவின்றிப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

கொழும்பு, செப். 23

கடற்றொழிலுக்குத் தேவையான எரிபொருளை விரைவில் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதுடன், இதற்கமைய மீனவர்கள் நாளாந்தம் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கடற்றொழில் அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்ற கடற்றொழில் அலுவல்கள் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், நன்னீர் மீன்பிடியை மேம்படுத்தும் நோக்கில் இவ்வருட இறுதிக்குள் அடையாளம் காணப்பட்ட 4,000 குளங்களில் மீன் குஞ்சுகளை இடுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இலங்கைக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்துக் கவனம் செலுத்தியிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், கடற்றொழில் துறைசார் பிள்ளைகளின் கல்வி, சுகாதாரம் மற்றும் நலன்புரியை மேம்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டமொன்று எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதி கொண்டாடப்படவிருக்கும் சிறுவர் தினத்துடன் இணைந்ததாக ஆரம்பிக்கவிருப்பதாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார். (அ)

# ஒரேயொரு மாணவனுடன் இயங்கும் 57 பாடசாலைகள்

கொழும்பு, செப். 23

தென் மாகாணத்தில் கா.பொ.த உயர் தர வகுப்புக்களில் ஒரு மாணவன் மாத்திரம் கற்கும் பாடசாலைகள் சுமார் 57 காணப்படுவதாக தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலிகமகே தெரிவித்தார்.

இந்த ஒரு மாணவனுக்காக உயர்தர வகுப்பு பாடநெறிகளை கற்பிக்க ஆறு, ஏழு ஆசிரியர்களை அமர்த்த வேண்டியுள்ளது. இப்படியான பாடசாலைகளில் கற்கும் உயர்தர மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அண்மையிலுள்ள பிரபல பாடசாலைகளில் கல்வியைத் தொடர நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென ஆளுநர் மேலும் கூறினார்.

கல்விக்காக பௌதீக மற்றும் மனித வளங்களைப் பயனுள்ள விதத்திலும் ஆசிரியர்களை சமநிலைப்படுத்தலும் அவசியம் என அவர் குறிப்பிட்டார்.

மேலும் 20-30 மாணவர்கள் உயர்தரம் கற்கும் பாடசாலைகள் சுமார் 300 அளவில் உள்ளன. இப் பாடசாலைகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளதெனவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார். (அ)

# யாப்புத் திருத்தம் 22 (22A) குறித்த உயர் நீதிமன்ற தீர்ப்பு

# பாரதுாரமான விளைவுகள்!

ஜனாதிபதி சட்டத்தரணி டாக்டர் ஜயம்பதி விக்ரமரத்ன
(தமிழில் : வி. சிவலிங்கம்)



(நேற்றைய தொடர்ச்சி...)

2015ம் ஆண்டின் 19ஏ திருத்தச் சட்டமூலத்தின் மீதான தீர்மானத்தில் மேற்கொள்ளப்பட்ட(பிரதம நீதிபதி சிறீ பவன் மற்றும் நீதிபதி எக்க நாயக்க ) தீர்ப்புகளால் மேலும் ஒருபடி முன்னேற்றம் ஏற்பட்டது. இத் தீர்மானத்தின் அடிப்படை என்னவெனில் சர்வஜன வாக்கெடுப்பைத் தவிர்க்கவேண்டிய அத்தியாவசிய தேவை எதுவெனில் ஜனாதிபதி நிர்வாகத்தின் தலைவராகத் தொடர்ந்து செயற்படவேண்டும். அவரது நிர்வாகச் செயற்பாடுகளின் இறுதிச் 'செயற்பாடு அல்லது முடிவு' அவரது முடிவு என தக்க வைக்கப்பட வேண்டும் என்பதாகும். நீதிமன்றம் தெரிவிக்கும் 'செயற்பாடு அல்லது முடிவு' என்ற சொற்றொடரில் 'அல்லது' என்ற வார்த்தையின் பயன்பாடு வலியுறுத்தப்பட வேண்டும்.

எனவே முடிவு செய்வது அவரது முடிவாக இல்லாதிருப்பினும் இறுதிச் செயல் ஜனாதிபதியின் செயற்பாடாக இருத்தல் போதுமானது என்பதாகும்.

42வது பிரிவு தொடர்பாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளதாவது குடியரசு அரசாங்கத்தின் வழிகாட்டுதல்கள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவை பொறுப்பேற்கிறது. அத்துடன் கூட்டுப் பொறுப்பு மற்றும் நாடாளுமன்றத்திற்குப் பதிலளிக்கக்கூடியது என அப் பிரிவு தெரிவிப்பதோடு நிறைவேற்று அதிகாரத்தின் ஒரே குவிப்பு ஜனாதிபதி அல்ல என்பதை உறுதியாக நிறுவுவதாக உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இவை 2002ம் ஆண்டின் அரசியலமைப்பின் 19வது திருத்தத்திலும், ஏழுபேர் கொண்ட அமர்வு இதனை வலியுறுத்தியுள்ளது. நிறைவேற்று அதிகாரம் என்பது ஜனாதிபதியுடன் மட்டும் அல்லது தனி மனிதராக அடையாளப்படுத்தக் கூடாது. அத்துடன் அவை மக்கள் சக்தியின் அடையாளமாகவே சகல சமயங்களிலும் அடையாளம் காணப்பட வேண்டும் என அந்த வழக்கில் நீதிமன்றம் தெரிவித்தது.

13வது திருத்தச் சட்டத்தில் நீதியரசர் வனசுந்தரவின் உத்தரவானது ஜனாதிபதியை அங்கமாகக் கொண்டுள்ள அமைச்சரவையானது அரசாங்கப் பொறிமுறையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். நிறைவேற்று அதிகாரப் பகிர்வு மற்றும் அதனை மீறும் எந்தவொரு முயற்சியும் அமைச்சரவை என்ற அடைப்பானாக (Valve), உட்போக்கி ( conduit) இல்லாமல் நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்துவது போன்றதாகும். இவ்வாறான விதத்தில் நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்துவது அரசியலமைப்பின் அடிப்படைப் பொறிமுறை. அதன் வடிவமைப்பு என்பவற்றிற்கு முரணானது.

பிரதமரின் ஆலோசனையின் பிரகாரம் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களை ஜனாதிபதி நியமிக்க வேண்டும் என்ற விதிகளுக்கு வாக்கெடுப்பு அவசியம் என்பதை நீமன்றம் கண்டு கொள்ளவில்லை என்பது முக்கியத்துவம் பெறுகிறது. இது தீர்ப்பின் சாராம்சத்துடன் ஒத்துப் போகிறது. குடியரசுத் தலைவர் இங்கு நியமன அதிகாரியாக செயற்படுகிறார். அமைச்சர்களை நியமிப்பது பிரதமரின் முடிவாக இருந்த போதிலும் அது ஜனாதிபதியின் செயலாகவே தொடர்கிறது.

மறுபுறத்தில் பிரதமர் தனது அமைச்சர்களுக்கென ஒதுக்கிய பகுதிகள் மற்றும் செயற்பாடுகளைத் தீர்மானிப்பவராக இருப்பதும், எவ்வேளையிலும் அப் பணியை மாற்றலாம் என வழங்கிய சரத்துகள் ஜனாதிபதி அவற்றில் சம்பந்தப்பட்டிருக்கமாட்டார் என்பதால் பொது வாக்கெடுப்பு தேவைப்படும். இதனால் நீதிமன்றம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கேனும் திருத்த நடைமுறையிலுள்ள கடினத் தன்மையைத் தளர்த்தியது எனலாம்.



## பகுதி 3

### அரசியலமைப்பின் கடினத் தன்மையை மேம்படுத்தல்

22ஏ தொடர்பாக உயர்நீதிமன்றம்

இத் தொடர் கட்டுரையின் இறுதிப் பகுதியான இப் பத்தியில் 19ஏ திருத்தச் சட்டமூலத்தின் மீதான உயர்நீதிமன்றத்தின் தீர்மானமானது ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதில் சில நெகிழ்வுத் தன்மையை அனுமதித்துள்ள அதேவேளை 21ஏ, 22ஏ திருத்தச் சட்டமூலங்கள் மீதான அதன் தீர்மானங்கள் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி ஆட்சி முறையை மேலும் பலப்படுத்தியுள்ளதாகக் கட்டுரையாளர் கருதுகிறார். 21ஏ, 22ஏ ஆகிய இரு தீர்மானங்களிலும் இலங்கை அரசாங்கத்தின் தோற்றத்தினை ஜனாதிபதி வடிவத்திற்கு 30வது சரத்தின் பிரகாரம் மாற்ற முனைந்திருப்பினும் அவை வேருன்றவில்லை. ஆகையால் வாக்கெடுப்பின்றித் திருத்தப்படலாம் என்ற பிரதான உண்மையை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவில்லை.

### 21ஏ மற்றும் 22ஏ தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் பின் நோக்கித் தள்ளிய படிகள்

20ஏ தொடர்பாக ஐ.ம.ச. இனது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை முற்றிலுமாக அகற்றும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. மூவரை உள்ளடக்கிய (நீதிபதிகள் ஜெயசூர்ய, ஜனக் டி சில்வா, ஒபயசேகர) அமர்வு 19ஏ தொடர்பான தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஜனாதிபதி என்பவர் நிறைவேற்று அதிகாரத்தின் ஒரே இருப்பிடம் அல்ல என்ற தெளிவற்ற அறிக்கையுடன் 4(டி) இல் இலங்கையின் பாதுகாப்பு உட்பட மக்களின் நிறைவேற்று அதிகாரம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியால் பயன்படுத்தப்படுமெனபதுடன் சமரசம் செய்வது கடினம் எனத் தெரிவித்தது. நீதிமன்றம் 4வது பிரிவின் மீறல் என்பது 3வது பிரிவையும் மீறுவதற்கு வழிவகுக்கும் என்பதைத் தீர்மானிக்க இரண்டு சோதனைகளை மேற்கொண்டது.

தூதுக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் பிரகாரம் மக்களால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட நிறைவேற்று அதிகாரத்தில் வேறு நபர் அல்லது நிறுவனத்தை உட்கொண்டு வரும் எந்தவொரு மாற்றமும் மக்களின் ஒப்புதலுடன் இருத்தல் வேண்டும்.

அந்நியப்படுத்தும் பரிசோதனை என்பது அரசாங்கத்தின் ஒரு உறுப்பிற்குரிய அதிகாரத்தை மற்றொன்றிற்கு மாற்றுவது இணைப்பைத் துறப்பது அல்லது அகற்றுவது எனில் மக்களின் ஒப்புதல் தேவை.

பிரதிநிதித்துவம் தொடர்பான சோதனையில் உறுப்புரை 4(டி) பிரிவில் திருத்தங்களுக்கான முன்மொழிதலுக்கு விண்ணப்பிக்கும் போது நிறைவேற்று அதிகாரம் என்பது ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையால் பயன்படுத்தப்படும் என உறுப்புரை 4( டி) இற்கு முன்மொழியப்பட்ட திருத்தத்திற்கு வாக்கெடுப்பு ஒப்புதல் தேவை என நீதிமன்றம் கூறியது.

பிரதிநிதித்துவ சோதனைக்கு முன்மொழியும்போது பிரதமரின் ஆலோசனையின் அடிப்படையில் ஜனாதிபதி செயற்பட வேண்டும் என்பதற்கும், அவ்வாறான ஒப்புதல் தேவை என நீதிமன்றம் தெரிவித்தது.

ஜனாதிபதி என்பவர் நாடாளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவார் மக்களால் அல்ல என்ற முன்மொழிவு சட்டப்பிரிவு 4(ந) ஐ மீறுவதாகவும் நீதிமன்றம் கூறியது. இதன் பிரகாரம் அவதானிக்கையில் ஜனாதிபதி தேர்தலில் வாக்குரிமை பயன்படுத்தப்படும் என்பதாகிறது. மேற் கூறிய மற்றும் பலவற்றிற்கான காரணம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு பொது வாக்கெடுப்பு மூலமான ஒப்புதல் அவசியமென நீதிமன்றம் முடிவு செய்தது.

இருப்பினும் ஜனாதிபதி முறையோடு சம்பந்தப்படும் இரண்டு அரசியலமைப்பு விதிகள் மற்றும் அவர் தேர்ந்தெடுக்கப்படும் விதம் குறித்து நீதிமன்றம் கையாளவில்லை.

குடியரசுத் தலைவர் தொடர்பாக உள்ள பிரிவு 30 ஆரம்பத்தில் இவ்வாறு கூறியது.

(1) இலங்கைக் குடியரசிற்கு ஜனாதிபதி ஒருவர் இருப்பார் எனவும், அவர் அரசின் தலைவராகவும், நிறைவேற்று மற்றும் அரசின் தலைவராகவும், ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதியாகவும் இருப்பார்.

(2) குடியரசின் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதோடு 6 ஆண்டுகள் பதவியிலிருப்பார். 19ஏ திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.

ஜனாதிபதி என்பவர் அரசுத் தலைவராகவும், நிறைவேற்று அதிகாரத்தின் தலைவராகவும் மாத்திரமின்றி அரசாங்கத்தின் தலைவராகவும் இருக்கவேண்டும் என்பதே இலங்கையின் அரசாங்கத்தின் வடிவத்தினை 'ஜனாதிபதியாக' ஆக்குகிறது.

1972ம் ஆண்டின் அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதி அரசின் தலைவராகவும், நிர்வாகத்தின் தலைவராகவும் இருந்தார். ஆனால் அரசாங்கத்தின் தலைவராக இருக்கவில்லை. அத்துடன் அவர் பிரதமரின் ஆலோசனையின் பிரகாரம் செயற்பட வேண்டும். எனவே 1978ம் ஆண்டின் அரசியலமைப்பை இலங்கை ஏற்றுக்கொண்டபோது அம் மாற்றங்கள் பிரிவு 30(1) விதி மூலமாகவே மேற்கொள்ளப்பட்டன.

ஆனாலும் பிரிவு30(1) வேருன்றியதாக (entrenched) இருக்கவில்லை. பிரிவு 83 இல் வாக்கெடுப்பைத் துாண்டும் விதிகளின் பட்டியலில் இது இருக்கவில்லை. வேருன்றிய விதிகளின் பட்டியலிலும் (entrenched provisions) 30(1) ஒதுக்கி விடப்பட்டது. பிரிவு 30(2) இலுள்ள '(வ) குடியரசுத் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்' என்ற விதியும் வேருன்றிய விதிகளின் பட்டியலிலிருந்து தவிர்க்கப்பட்டது.

இங்குள்ள முக்கிய அம்சம் எதுவெனில் 'ஜனாதிபதி 6 ஆண்டுகள் பதவியில் இருப்பார்' என்ற பிரிவின் 30(2) இன் இரண்டாம் பகுதி மட்டுமே ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிக்கும் அளவிற்கு வேருன்றியுள்ள நிலையில் நீடிப்புத் தேவையாயின் வாக்கெடுப்பு அவசியம் என்றாகிறது.

இக் குறைபாடுகள் திட்டமிட்டே மேற்கொள்ளப்பட்டதாகக் கருத வேண்டும்.

(09 ஆம் பக்கம் பார்க்க....)

# “பிரிந்தால் வீழ்வீர்கள்”:

## பழனிசாமிக்கு பாடம் எடுத்த அமித்ஷா

“பிரிந்தால் வீழ்வீர்கள்“ என அ.தி.மு.க., இடைக்கால பொதுச்செயலர் பழனிசாமியிடம் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கூறியதாக தகவல் வெளியாகி உள்ளது.

இரட்டை தலைமையை நீக்கி விட்டு அ.தி.மு.க., இடைக்கால பொதுச்செயலராக பழனிசாமி தேர்வு செய்யப்பட்டதை தொடர்ந்து அக்கட்சியில் உட்கட்சி மோதல் உச்சத்தை எட்டியுள்ளது. பழனிசாமியை எதிர்த்து, பன்னீர்செல்வம் தொடர்ந்த வழக்குகளில் இறுதி தீர்ப்பு வராவிட்டாலும், இடைக்கால தீர்ப்புகள் பழனிசாமிக்கு சாதகமாகவே வந்துள்ளன.

ஆனாலும் பழனிசாமி மகிழ்ச்சி அடைய முடியாத அளவுக்கு அவர் மீதும் வேலுமணி, விஜயபாஸ்கர் போன்ற முன்னாள் அமைச்சர்கள் மீதும் பல்வேறு ஊழல் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. தமிழக அரசின் லஞ்ச ஒழிப்புத் துறை மட்டுமல்லாது மத்திய அரசின் வருமான வரித் துறை, அமலாக்கத் துறையும் அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர்கள் பலரது வீடுகள் அலுவலகங்களில் சோதனை நடத்தியுள்ளது.

இந்நிலையில் டில்லி சென்ற பழனிசாமி, மத்திய உள்துறை அமைச்சரும் பா.ஜ.க., முன்னாள் தேசிய தலைவருமான அமித்ஷாவை சந்தித்து பேசினார். அப்போது, முன்னாள் அமைச்சர்கள் வேலுமணி, சி. வி.சண்முகம் ஆகியோர் உடனிருந்தனர்.

சந்திப்புக்கு பின் பேட்டியளித்த பழனிசாமி, “அமித்ஷாவுடன் அரசியல் தொடர்பாக எதுவும் பேசவில்லை. கோதாவரி -- காவரி இணைப்பு திட்டம் போன்ற தமிழகத்தின் நலன் சார்ந்த சில கோரிக்கைகளை முன்வைத்தோம். தி.மு.க., ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து வருவது பற்றி, அவரது கவனத்திற்கு கொண்டுச் சென்றோம்“ என்றார். ஆனாலும், இந்த சந்திப்பில் 90 சதவீதம் அரசியல் பேசபட்டது என்கின்றனர் பா.ஜ.க.,வினர்.

இது தொடர்பாக, பா.ஜ., தலைவர் ஒருவர் கூறியதாவது: கடந்த 2019 லோக்சபா தேர்தலின் போது தொகுதி பங்கீடு தொடர்பாக பழனிசாமியிடம் தான் அமித்ஷா பேசினார். கடைசியாக 2004-ல் கூட்டணியில் இருந்தபோது, பா.ஜ.க.,வுக்கு ஜெயலலிதா ஏழு தொகுதிகளை ஒதுக்கினார். அதுபோல ஏழு தொகுதிகள் வேண்டும் என, அமித்ஷா கேட்டார். ஆனால் ஏதேதோ காரணம் கூறி கடைசியில் ஐந்து தொகுதிகளை மட்டுமே ஒதுக்கினார். அதுபோல, அமித்ஷா தலைமையில் கூட்டணியை அறிவிக்கவும் மறுத்து பழனிசாமியே அனைத்தையும் செய்தார். இதனால் அவரை பற்றி அமித்ஷாவுக்கு நன்கு தெரியும்.

“வரும் 2024 லோக்சபா தேர்தலிலும் தி.மு.க., கூட்டணி வென்றால் தமிழகத்தில் நீங்கள் அரசியலே செய்ய முடியாது. எனவே, 2024-ல் குறைந்தது 25 இடங்களிலாவது வெற்றி பெற திட்டமிடுங்கள். அதற்கு மாறாக, கட்சி கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்ற ஒற்றை இலக்குடன் மட்டும் செயல்பட்டால், மேலும் பிளவு ஏற்படும். ஏற்கனவே, தினகரன் ஓட்டுகளை பிரித்துள்ளார். இனியும் பிரிந்தால் வீழ்வீர்கள்” என, அமித்ஷா எச்சரித்துள்ளார். “அனைவரையும் அரவணைத்து, அ.தி.மு.க., பிளவுபடுவதை தடுத்து, 2024-ல் பா.ம.க., - தே.மு.தி.க., புதிய தமிழகம் மற்றும் சிறிய கட்சிகளை ஒருங்கிணைத்து வலுவான கூட்டணி அமைக்க, இப்போது திட்டமிடுங்கள். 2024-ல் தி.மு.க., அதிக இடங்களை வென்றால் அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர்கள் அனைவரும் ஊழல் வழக்கில் சிறை செல்ல வேண்டி வரும். எனவே, உங்களுக்குள் அடித்து கொள்ளாமல், தி.மு.க.,வை தோற்கடிக்க வேலை செய்யுங்கள்” என்றும், பழனிசாமியிடம் அமித்ஷா கூறியுள்ளார்.

இதேவேளை, அ.தி.மு.க., இடைக்கால பொதுச் செயலராக, பழனிசாமி தேர்வு செய்யப்பட்டதற்கு, பொதுக் குழு உறுப்பினர்கள் அளித்த ஆதரவு கடிதங்களை, அவரது தரப்பினர் நேற்றுமுன்தினம் தேர்தல் கமிஷனில் ஒப்படைத்தனர். இடைக்கால பொதுச் செயலராக உள்ள பழனிசாமி, நிரந்தர பொதுச் செயலராகும் முயற்சிகளில் தீவிரம் காட்டி வருகிறார். அ.தி.மு.க., பொதுக்குழு விவகாரம் தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, இடைக்கால பொதுச் செயலர் பதவியை பழனிசாமி தக்க வைத்துள்ளார். தீர்ப்பு வெளியான பின், சென்னையில் உள்ள கட்சி தலைமை அலுவலகம் சென்றார்.அனைத்து மாவட்டங்களிலும், அ.தி.மு.க., சார்பில் பொதுக்கூட்டம் அறிவித்தார் சென்னை பொதுக் கூட்டத்தில் அவர் பங்கேற்றார்.

மின் கட்டண உயர்வை கண்டித்து, அனைத்து மாவட்டங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டம் அறிவித்து, வெற்றிகரமாக நடத்தினார் செங்கல்பட்டில் நடந்த ஆர்ப்பாட்டத்திலும் அவர் பங்கேற்றார். அ.தி.மு.க., அலுவலகசாவி தொடர்பான வழக்கிலும், பழனிசாமி தரப்புக்கு சாதகமாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளதால், கட்சி அலுவலகமும் அவரது கைக்கு வந்துள்ளது. எனினும், பன்னீர்செல்வம் தரப்பின் மேல் முறையீடு, தன் ஆதரவாளர்களை சுற்றியடிக்கும் “ரெய்டு“கள், வரிசை கட்டி நிற்கும் வழக்குகள் ஆகியவை பழனிசாமிக்கு குடைச்சல்களாக உள்ளன.

அனைத்துக்கும் மேலாக, மத்தியில் ஆட்சியில் உள்ள பா.ஜ.,வின் ஆதரவு அவருக்கு உள்ளதா, இல்லையா என்பதும் புதிராக இருக்கிறது. இதை உறுதி செய்வதற்காக பழனிசாமி, 20ம் திகதி டில்லி சென்று, உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து பேசினார். ஆனால், இந்த சந்திப்பு, பழனிசாமிக்கு போதிய திருப்தியை தரவில்லை என்றே கூறப்படுகிறது. எனினும், கட்சியை முழுமையாக தன் கட்டுப்பாட்டில் கொண்டு வர, அவர் திட்டமிட்டுள்ளார்.

அதற்காக, கிடைக்கும் வாய்ப்புகளில் ஒன்றைக் கூட தவறவிடக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளார். தனக்கான அடுத்த சோதனைக் களமாக, தேர்தல் கமிஷன் இருக்கும் என்று எதிர்பார்க்கிறார். இதையடுத்து, அங்கு தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் பணிகளை பழனிசாமி முடுக்கி விட்டுள்ளார். டில்லி பயணத்தில், அவருடன் வந்த முன்னாள் அமைச்சரும், ராஜ்யசபா எம்.பி.,யுமான சண்முகத்திடம் அந்த பொறுப்பை ஒப்படைத்து, பழனிசாமி தமிழகம் திரும்பினார்.தேர்தல் கமிஷன் தொடர்பான விவகாரத்தை கவனித்து வரும் வழக்கறிஞர்கள் குழுவுடன், தீவிர ஆலோசனை நடத்திய சண்முகம், அவர்கள் அறிவுறுத்தலின்படி பொதுக்குழு உறுப்பினர்களிடம் இருந்து, ஆதரவு கடிதங்களை வாங்கி வந்திருந்தார்.

பொதுக்குழு உறுப்பினர்கள் 2,000க்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்ட ஆதரவு கடிதங்கள், தலைமை தேர்தல் கமிஷனில் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டன.

# யாப்புத் திருத்தம் 22 (22A) குறித்த ...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பிரிவு 4 என்பது வேருன்றிய ஏற்பாடு அல்ல எனத் தெரிவிப்பதன் மூலம் அது பலப்படுத்தப்படுகிறது.

22ஏ தொடர்பாக உயர்நீதிமன்றம் கையாளும்போது 21ஏ மீதான தீர்மானத்தில் அதன் நியாயத்தைப் பின்பற்றியது. அதன் பிரகாரம் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களை நியமிப்பதற்கும் அவர்களை நீக்குவதற்கும் பிரதமரின் ஆலோசனைப்படி ஜனாதிபதி செயற்பட வேண்டும் என்பது பொது வாக்கெடுப்பின் மூலம் அனுமதி பெறப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நீதிமன்றமானது ஜனாதிபதி 14 நாட்களுக்குள் அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின்படி சுயாதீன ஆணைக்குழுக்கான நியமனங்களை வழங்காவிடில் அவ் நியமனங்கள் வழங்கப்பட்டதாகக் கருதப்படும் என்ற உத்தேச விதிமுறைக்கும் இதே போன்று மக்கள் அங்கீகாரம் தேவை என நீதிமன்றம் தீர்மானித்தது.

இக் கட்டுரைத் தொடரின் பகுதி 1இல் தெரிவித்தபடி பிரதமரைப் பதவி நீக்கம் செய்வதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருத்தல் வேண்டும் எனவும் நீதிமன்றம் கூறியது. இங்கு கட்டுரையாளர் மிகவும் கண்ணியத்துடன் தெரிவிப்பது என்னவெனில் 21ஏ தொடர்பான வழக்கில் நீதிமன்றம் மிகவும் பாரதூரமான தவறை இழைத்துள்ளதாக கருதுகிறார்.

அதாவது 21ஏ வழக்கில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுவார் எனவும், அவர் பிரதமரின் ஆலோசனைப்படி செயற்பட வேண்டும் எனவும் தீர்மானிப்பதில் நீதிமன்றம் கடுமையான தவறிழைத்துள்ளதாக கட்டுரையாளர் கருதுகிறார்.

பிரிவு 30(1) மற்றும் 30(2) பிரிவின் விதிகள் ஆகியவற்றில் ஜனாதிபதி மக்களால் தேர்தெடுக்கப்படுவார் என்ற விதியை சட்டப் பிரிவு 4 இல் வேருன்றச் செய்யாத நிலையில் சட்டவாக்கத்தினர் பிரிவு 30(1)இனையும் ஜனாதிபதி மக்களால் தேர்தெடுக்கப்படுவதையும் மேலே குறிப்பிட்ட அளவிற்கு வேருன்ற வைக்கவில்லை.

மேலே விவாதிக்கப்பட்ட அளவிற்கு 30வது பிரிவை வேருன்றச் செய்யாத நிலையில் 22ஏ தொடர்பான முடிவில் தவறிழைக்கப்பட்டுள்ளது.

19ஏ தொடர்பாக உயர்நீதிமன்றம் மேற்கொண்ட தீர்மானத்தை மிகவும் தெளிவாகவே கட்டுரையாளர் ஆதரிக்கிறார். அத்துடன் 21ஏ, 22ஏ வழக்குகளில் நீதிமன்றம் தனது தீர்மானங்களையும் அதில் பிரிவு 30 வேருன்றிய பகுதியாக ஆக்கப்படாமல் இருப்பதால் ஏற்படும் தாக்கங்களையும் மறு ஆய்வுக்கு உட்படுத்தும் என நம்புகிறார்.

**அரசியல் யாப்பு இறுக்கநிலை**

21ஏ மற்றும் 22ஏ தொடர்பான தீர்மானங்கள் அரசியலமைப்பின் இறுக்கமான போக்கினை மேம்படுத்தியுள்ளது. 19ஏ சம்பந்தமான தீர்மானம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் திருத்தத்தை மேற்கொள்ள சில நெகிழ்வினை அனுமதித்தது. எந்தவொரு திருத்தத்தையும் மக்களின் இறையாண்மையுடன் ஒப்பிடலாம் என வாதிடுவது இலகுவானது. ஆனால் வாக்கெடுப்பிற்குத் திருத்தங்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் அதிகளவு நிதிச் செலவும், பெரும் கால விரயமும் ஏற்படுகிறது. அரசாங்கத்தை எந்தக் கட்சி நடத்தினாலும் அரசியல் அடிப்படையில் மிகவும் செலவு நிறைந்தது.

சமீபத்தைய ‘அறகலய’ நிகழ்வுகளின் போது அரசியலமைப்பு நடைமுறையைக் கடந்து புறக்கணித்துச் செல்லும் அவசியம் குறித்து பல குழுக்களால் தெரிவிக்கப்பட்டது. இராணுவ சர்வாதிகாரத்தைச் சட்டபூர்வமாக மாற்றுவதற்கு அதாவது பாகிஸ்தானிலும், வேறு பல இடங்களிலும் சர்ச்சைக்குரிய வகையில் பயன்படுத்தப்படும் ‘ தேவைக் கோட்பாடு’ ( Doctrine of necessity) என்பதைப் பயன்படுத்தவும் சில பிரிவினர் பரிந்துரைத்தனர். இருப்பினும் சட்டப் பிரிவைச் சார்ந்த பெரும்பாலோர் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றுவது அரசியலமைப்பு வழியிலான நலன்களுக்கு உகந்தது என அறிவுறுத்தினர்.

இங்கு ரணசிங்க, இப்ரா லெப்பை என்போர் லஞ்ச ஆணையாளருக்கு எதிராக தொடர்ந்த வழக்கில் மகாராணியின் பிரிவி கவுன்சிலின் கட்டளையின் பிரகாரம் சுதந்திர அரசியலமைப்பின் பிரிவு 29(2) என்பது மாற்ற முடியாதது என்ற நம்பிக்கைக்கு எவ்வாறு வழிவகுத்தது? என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதுவே 1972ம் ஆண்டின் அரசியலமைப்பில் அவ்வாறு குறிப்பிட்டுள்ள நடைமுறை தவிர்க்கப்பட்டது.

அவ்வாறு 1972 இல் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பு ஆளும் கூட்டணியால் திணிக்கப்பட்ட ஒன்றாகும். பிரித்தானிய முடியாட்சியிலிருந்து முற்றிலுமாக முறித்துக்கொண்டு நாடாளுமன்ற ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டதும், அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தை அறிமுகப்படுத்தியதுடன் அரச கொள்கைகளின் பிரகடனத்தை இணைத்ததும் சந்தேகத்திற்கு இடமில்லாது பாராட்டத் தக்கனவாகும். ஆயினும் 1972 இன் அரசியல் யாப்பு பெரும்பான்மை வாதத்திற்கு வழி வகுத்தது. இதன் மூலம் சட்டப்படியான ஆட்சி, அரசியலமைப்பின் மேலாதிக்கம் என்ற கோட்பாடுகள் பின்தள்ளப்பட்டன.

அரசியலமைப்பினை மிகவும் நெகிழ்வுள்ளதாக அல்லது மிகவும் கடினமானதாக மாற்றும் இறுக்கமான நீதித்துறை விளக்கங்கள் ஆகிய இரண்டும் தவிர்க்கப்பட வேண்டும். 2015 இல் நீதியரசர். எஸ். சிறீஸ்கந்தராஜா அவர்களது நினைவுப் பேருரையை வழங்கிய பேராசிரியர். என். செல்வகுமாரன் அரசியலமைப்பு கட்டமைப்புகளின் இறுக்கத்திற்கும், அரசியலமைப்பு விளக்கத்தின் நெகிழ்வுத் தன்மைக்கும் இடையில் ஏற்றுக் கொள்ளும் வகையில் சமநிலையை ஏற்படுத்த வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தார். ஒரு அரசியலமைப்பு என்பது சட்டப்படியான ஆட்சியை உயர்த்திப் பிடிப்பதும், அடிப்படை உரிமைகள் மற்றும் மக்களின் சுதந்திரத்தை உறுதி செய்வதுமாகும். இதில் உண்மையான மற்றும் செயற்பாட்டு ஜனநாயகத்தை, ஜனநாயக ஆட்சியை நிலைக்கச் செய்யவும், மேம்படுத்தவும் நீதித்துறை மிக முக்கிய பங்கை வகிக்கிறது. **(முற்றும்)**




# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |

**60.** **பொருத்தமான வாக்கியங்கள்**

### கல்வி tv CHANNEL-1

**23.09.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி tv CHANNEL - 2

**23.09.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# காத்தான்குடி செல்கிறது ஜனாதிபதி ஆணைக்குழு

மட்டக்களப்பு, செப். 23

காணாமலாக்கப்பட்டோர் மற்றும் கடத்தப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதி ஆணைக்குழு காத்தான்குடிக்கு செல்லவுள்ளது.

எனவே, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சாட்சியங்களை உறவினர்கள் ஆணைக்குழுவுக்கு வழங்க முடியும் என படுகொலை செய்யப்பட்டோர் தொடர்பான ஏறாவூர் ஞாபகார்த்தப் பேரவையால் பொதுமக்களுக்கு பொது அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பள்ளிவாசல் ஒலிபெருக்கிகளில் விடுக்கப்பட்ட பொது அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த காலங்களில் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளை உள்ளடக்கிய ஜனாதிபதி ஆணைக்குழு, எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை காத்தான்குடிக்கு வருகை தரவுள்ளது.

எனவே, அந்தச் சந்தர்ப்பத்தில் ஆணைக்குழு முன் தோன்றி, பயங்கரவாதம் நிலவிய காலப்பகுதியில் இந்தப் பிரதேசத்திலிருந்து காணாமலாக்கப்பட்டு அல்லது கடத்தப்பட்டு இல்லாமலாக்கப்பட்டோரின் விவரங்களைச் சமர்ப்பித்து சாட்சியங்களைப் பதிவு செய்ய முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



# சாய்ந்தமருது அல்-ஹிலால் மாணவர்கள் கள விஜயம்

அம்பாறை, செப். 23

சாய்ந்தமருது அல்-ஹிலால் பாடசாலையில் தரம் 1 இல் கல்வி பயிலும் மாணவர்கள் சாய்ந்தமருது பொதுச் சந்தை மற்றும் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் ஆகிய வற்றை கடந்த புதன்கிழமை பார்வையிட்டனர்.

இந்தக் கள விஜயத்தில், தரம் 1 ஏ வகுப்பில் கல்வி பயில்கின்ற சுமார் 41 மாணவ, மாணவிகள் சென்று பார்வையிட்டனர்.

சந்தையில் விற்கப்படும் பொருட்களான விதவிதமான மீன் வகைகள், கருவாடு வகைகள், மரக்கறி வகைகள், இறைச்சி வகைகள் உட்பட சமையலுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற இதர பொருட்களும் மாணவர்களுக்குக் காண்பிக்கப்பட்டு, அவை பற்றிய பூரண விளக்கங்களும் விற்பனையாளர்களால் வழங்கப்பட்டன.

பின்னர் சாய்ந்தமருது ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலினை ஆர்வத்துடன் பார்வையிட வந்த மாணவர்கள், தொழுமிடம், மிம்பர் மேடை, அதான் சொல்லுமிடம் போன்ற இடங்களும் மாணவர்களுக்கு காண்பிக்கப்பட்டு, போதிய விளக்கங்களும் கொடுக்கப்பட்டன. (அ)

# திருகோணமலை மாநகர சபை எல்லை நிர்ணயம் சதி முயற்சி!

## கண்டித்து நகர சபையில் தீர்மானம்

திருமலை, செப்.23

**திருகோணமலை நகராட்சி மன்றத்தை மாநகரசபையாக தரமுயர்த்தும்போது எல்லை பிரிப்பில் சபையில் பல தசாப்தங்களாக இணைக்கப்பட்டிருந்த அன்புவழிபுரம் வட்டாரம் பட்டணமும் சூழலும் பிரதேசசபை எல்லைக்குள் இணைக்கப்பட்டமையை எதிர்த்து திருகோணமலை நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

கடந்த 20ஆம் திகதி காலை சபையின் தலைவர் நா.இராஜநாயகம் தலைமையில் 54ஆவது மாதாந்த சபை அமர்வு நடைபெற்ற போது அன்புவழிபுரம் வட்டார உறுப்பினர் வடமலை ராஜ்குமார் கொண்டு வந்த விசேட பிரேரணையின் மூலமாக குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அன்புவழிபுரம் வட்டார உறுப்பினர் வடமலை ராஜ்குமார் தெரிவிக்கையில்-

கடந்த 05 செப்ரெம்பர் 2022 வரத்தமானி பிரகடனத்தின் படி திருகோணமலை நகராட்சி மன்றம் 20 மார்ச் 2023 அமுலுக்கு வரும் வகையில் மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இதன் எல்லை நிர்ணயத்தின்போது நகர சபை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் சபையோடு இணைந்திருந்த முதலாம் வட்டாரமான அன்புவழிபுரம் வட்டாரம் நகரசபையில் இருந்து பிரிக்கப்பட்டு பட்டனமும் சூழலும் பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டுள்ளமை திட்டமிட்ட அடிப்படையில் இடம் பெறும் சதியாக நாம் கருதுகின்றோம்.

நகரசபையாக இருக்கும் தமது பிரதேசம் மாநகரசபையாக தரமுயரும்போது பிரதேசத்தின் அபிவிருத்தி வரி செலுத்தவோருக்கான வரப்பிரசாரங்கள், அவர்களின் ஆதனங்களின் பெறுமதி உயர்வு என்று மகிழ்ச்சியில் இருந்த மக்களை பின்தள்ளி ஒரு பிரதேசசபை எல்லைக்குள் இணைப்பதன் மூலம் தரத்தில் பின்தள்ளும் இந்த செயற்பாட்டை பிரதேச மக்களின் சார்பில் நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்.

எமது நகரசபைக்கு சொந்தமாக நகர எல்லைக்குள் உள்ள இரண்டாவது பெரிய சந்தையான அனுராதபுர சந்தி சந்தைக் கட்டடத் தொகுதி மற்றும் நகரசபை விடுதி தொகுதிகள் 05 போன்றன பிரதேச சபை எல்லைக்குள் பறிபோகின்ற நிலை உருவாகிறது.இதனை ஒரு போதும் நாம் ஏற்க முடியாது.

எனவே இந்த எல்லை பிரிப்பின் மூலம் பாதிக்கப்படுகின்ற நகரசபையின் உயரிய சபையான இந்த சபையின் மூலம் எடுக்கப்படுகின்ற தீரமானத்தை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் பற்றும் எல்லை நிர்ணயக்குழு உறுப்பினர்கள் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் போன்றோருக்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டது.

இந்த தீர்மானத்தை முன்னாள் நகராட்சி மன்றத் தலைவர் கந்தசாமி செல்வராஜா (சுப்ரா) வழிமொழிந்து தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக உப தவிசாளர் காளிராசா கோகுல்ராஜ் , உறுப்பினர்களான லோ.கனகேஸ்வரன் , த. கௌரிமுகுந்தன், க.ஜெயபிரகாஷ் ,பி.டபில்யூ. சுசந்தஜெயலத் ஆகியோர் கருத்துக்களை முன் வைத்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# காரைதீவில் சுவாமி விவேகானந்தர் 125ஆவது ஓராண்டு தொடர் விழா

மட்டக்களப்பு, செப். 23

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் ஏற்பாட்டில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் காரைதீவு சுவாமி விபுலாநந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் சுவாமி விவேகானந்தர் 125 ஆவது ஓராண்டு தொடர் விழா நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

சுவாமி விவேகானந்தரின் வரலாற்றுச் சிறப்புமிக்க இலங்கை விஜயம் தொடர்பாக அறநெறிப்பாடசாலை ஆசிரியருக்கான பஜனை , வழிகாட்டுதல் தியானம், சொற்பொழிவு மற்றும் கேள்வி பதில் போன்ற வளப்படுத்தும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு அறிமுக உரையை காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் ஆற்றினார்.

இந்நிகழ்வுக்கு கொழும்பு இராமகிருஷ்ண சாரதா மிஷன் தலைவி ப்ரவ்ராஜிக சுசாந்தப்ராண மாதாஜி மற்றும் கொழும்பு இராமகிருஷ்ண சாரதா மிஷன் செயலாளர் ப்ரவ்ராஜிக ஆத்மதேவப்ராண மாதாஜி மற்றும் பிரமச்சாரினி ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# பாடசாலை வருகை கூடிய மாணவர்கள் நட்சத்திர பதக்கம் வழங்கி கௌரவிப்பு



அம்பாறை, செப். 23

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் முதலாவது தவணையின் மொத்த 59 பாடசாலை நாட்களில் 55 நாட்களுக்கு மேல் வருகை தந்த மாணவர்களுக்கு நட்சத்திர பதக்கம் வழங்கி பாராட்டப்பட்டது.

இவ் வைபவம் பிரதி அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரனின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் சீ.பாலசிங்கன் தலைமையில் நேற்று வியாழக் கிழமை நடைபெற்றது.

சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா பிரதம அதிதியாக கலந்து கொண்டார். தரம் 1 முதல் தரம் 11வரையுள்ள 25 மாணவர் கள் அதிதிகளால் பதக்கம் அணிவித்து கௌரவிக் கப்பட்டனர்.

நேற்றையதினம் பாடசாலைக்கு 5.30 மணிக்கு முந்தி வருகைதந்த குடியிருப்பு முறையைச் சேர்ந்த இரு மாணவிகள் கௌரவிக்கப்பட்டனர்.

கல்வி அமைச்சின் சமயம் மற்றும் விழுமியங்கள் சார் பிரிவின் பிரதி கல்வி பணிப்பாளர் எஸ். சுந்தரலிங்கம் கலந்து கொண்டு இவர்களை கௌரவித்தார். ஏனைய மாணவர்களின் முன்னிலையில் குறித்த சாதனை மாணவர்கள் நட்சத்திர பதக்கம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அ)

# புலமையாளர் கௌரவிப்பு விழா




அம்பாறை, செப். 23

காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் பெண்கள் பாடசாலையில் வருடாந்த புலமையாளர் கௌரவிப்பு விழா நேற்று முன்தினம் அதிபர் இ.ரகுபதி தலைமையில் நடைபெற்றது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற புலமையாளர் செல்வி ரகுநந்தன் தசாப்தனா விபுலானந்தா அதிபர் ம.சுந்தரராஜனால் கௌரவிக்கப்பட்டார். (அ)

# அணுசக்தி ஒப்பந்தத்தை தொடர ஈரான் முழு உறுதி

## ஐ.நாவில் இப்ராஹிம் ரய்சி தெரிவிப்பு



நியூயோர்க், செப். 23

வல்லரசு நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட அணுசக்தி ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பேண ஈரான் முழு உறுதியுடன் இருப்பதாகத் தெரிவித்துள்ள ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரய்சி, எனினும் ஒப்பந்தம் தொடர்பில் அமெரிக்கா அளிக்கும் வாக்குறுதிகளை நம்ப முடியுமா? என எனவும் கேள்வி எழுப்பினார்.

ஐ.நா. பொதுச் சபையில் நேற்று முன் தினம் உரையாற்றும்போதே ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரய்சி இவ்வாறு தெரிவித்தார்.

அணுசக்தி ஒப்பந்தத்துக்கு புத்துயிர் அளிப்பதில் நாங்கள் முழு உறுதியுடன் உள்ளோம். இதற்கான பேச்சுவார்த்தை, இறுதிக்கட்டத்தை அடைந்து விட்டது. ஆனால், இது தொடர்பாக நாடுகள் அளிக்கும் உறுதிமொழிகள் உறுதியாகப் பின்பற்றப்பட வேண்டும் என்பது தான் எங்கள் விருப்பமாக உள்ளது எனவும் அவர் கூறினார்.

அணுசக்தி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுவிட்டு, பின்னர் அந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அமெரிக்கா அறிவித்தது. எனவே, போதிய உத்தரவாதம் இல்லாமல் அமெரிக்கா அளிக்கும் வாக்குறுதிகள் நம்பிக்கைக்குரியவையாக இருக்குமா? என்பது சந்தேகமே எனவும் இப்ராஹிம் ரய்சி குறிப்பிட்டார்.

ஈரானுக்கும் ஐ.நா. பாதுகாப்பு சபை நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஜேர்மனிக்கும் இடையே கடந்த 2015-ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் ஏற்பட்டது. அதில், தங்களது அணுசக்தி திட்டங்கள் அணு ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஈரான் ஒப்புக்கொண்டது. அதற்குப் பதிலாக, ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை விலக்கிக்கொள்ள வல்லரசு நாடுகள் ஒப்புக்கொண்டன.

அமெரிக்க ஜனாதிபதியாக பராக் ஒபாமா இருந்தபோது செய்துகொள்ளப்பட்ட இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அவருக்குப் பின் வந்த டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார். மேலும், ஒப்பந்தத்தின் கீழ் விலக்கப்பட்டிருந்த ஈரான் மீதான பொருளாதாரத் தடைகளை அவர் மீண்டும் அமுல்படுத்தினார்.

அதற்குப் பதிலடியாக, தாங்கள் அணு ஆயுதம் தயாரிக்கப் போவதில்லை என்பதை உறுதி செய்யும் வகையில் நிறைவேற்ற ஒப்புக்கொண்ட நிபந்தனைகளை ஈரான் படிப்படியாக மீறி வருகிறது. இதன் காரணமாக அணுசக்தி ஒப்பந்தம் முறியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் அணுசக்தி ஒப்பந்தத்தை தக்கவைக்க, ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் வல்லரசு நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே பல கட்டங்களாக பேச்சுவார்த்தை அண்மை காலங்களில் தொடர்ச்சியான இடம்பெற்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# போருக்காக நாட்டை திரட்டும் அறைகூவலை விடுத்தார் புடின்!

## அணுவாயுத பாவனை பற்றி அவர் மறைமுக எச்சரிக்கை!!



மொஸ்கோ, செப். 23

அதிபர் விளாடிமிர் புடின் ஆற்றியுள்ள தொலைக்காட்சி உரை ஒன்றில் நாட்டைப் போருக்காகப் பகுதி அளவில் அணி திரட்டும் அறைகூவலை விடுத்துள்ளார். கட்டாயப் போர்ப் பயிற்சி பெற்ற சுமார் 25 மில்லியன் ரஷ்யர்களில் சுமார் மூன்று லட்சம் பேரை உடனடியாகக் களமிறக்குகின்ற அறிவிப்பை மொஸ்கோ விடுத்திருக்கிறது.

முன் கூட்டியே ஒளிப்பதிவு செய்து வெளியிடப்பட்டது எனக் கூறப்படும் அந்த உரையில், "மேற்குக் கூட்டணிக்கு எதிரான அணி திரள்வு" உடனடியாக இன்றைய தினமே (புதன்) நடைமுறைக்கு வருகின்றது என்று புடின் தெரிவித்திருக்கிறார்.

மேற்கு நாடுகளது கூட்டணியின் அச்சுறுத்தல்களுக்கு எதிராக ரஷ்யா அணு ஆயுதங்களைப் பாவிப்பதற்கும் தயங்க மாட்டாது என்ற ஓர் எச்சரிக்கையையும் புடின் தனது உரையில் மறைமுகமாக வெளியிட்டிருக்கிறார். மேற்கு நாடுகள் "அணு ஆயுத அச்சுறுத்தலில்" ஈடுபட்டு வருவதாகவும், மாஸ்கோவிடம் "பதிலளிக்க நிறைய ஆயுதங்கள்" இருப்பதாகவும் அவர் கூறினார்.

"எங்கள் நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு அச்சுறுத்தலுக்கு உள்ளாகும்போது, ரஷ்யாவையும் நமது மக்களையும் பாதுகாக்க நாங்கள் நிச்சயமாக எங்கள் வசம் உள்ள அனைத்து வழிகளையும் பயன்படுத்துவோம். அது எமது முட்டாள்தனம் அல்ல," என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

புடினின் இந்தக் கூற்று அணுவாயுத மோதல் தொடர்பான கருத்துப் பரிமாற்றங்களைத் தூண்டியுள்ளது.

ரஷ்யாவில் இவ்வாறு ஒரு போர் அணிதிரள்வு அழைப்பு விடுக்கப்படுவது இரண்டாம் உலகப் போரின் பின்னர் இதுவே முதல் தடவையாகும். புடினின் அறிவிப்பு அமெரிக்கா, பிரான்ஸ் உட்பட பல தலைவர்களின் கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. நியூயோர்க்கில் நடைபெறுகின்ற ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்திலும் அது எதிரொலித்திருக்கிறது.

ஆனால் போர்க் களத்தில் அது எந்தவிதமான பெரும் கள நிலை மாற்றங்களையும் உடனடியாக ஏற்படுத்தாது என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

உக்ரைனில் சமீப நாட்களாக ரஷ்யா களத்தில் பெரும் பின்னடைவுகளைச் சந்தித்து வருகின்ற பின்னணியில் போரைத் தீவிரப்படுத்தும் விதமான புதிய போர்ப் பிரகடன அறிவிப்பைப் புடின் வெளியிட்டிருக்கிறார்.

ரஷ்யப்படைகள் வசம் இருந்த முக்கிய நகரங்கள் மீது உக்ரைன் துருப்புக்கள் கடும் எதிர்த் தக்குதல்களை நடத்தி அவர்களைப் புறமுதுகிடச் செய்துள்ளதால் அந்தத் தோல்வியை - பின்னடைவை-மறைப்பதற்காகவே புடின் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார் என்று உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது.

புடினின் இந்த உரையை அடுத்து அவர் மீது இயன்றளவு அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறு அதிபர் மக்ரோன் உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். உக்ரைன் மீதான போரை நிறுத்துமாறு சீனாவும் இந்தியாவும் கேட்டிருப்பதை அவர் வரவேற்றுள்ளார். (அ)

# இலவச ரொட்டி வழங்கும் இயந்திரம் டுபாய் முழுவதும் பொருத்தப்பட்டது

டுபாய், செப். 23

பசியுடன் ஒருவரும் வாடக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில், துபாய் முழுதும் ஆங்காங்கே சூடான ரொட்டியை இலவசமாக அளிக்கும், "வெண்டிங்" இயந்திரங்களை அந்நாட்டு அரசு நிறுவியுள்ளது. மேற்காசிய நாடான ஐக்கிய அரபு எமிரேட்சின் டுபாயில், வெளிநாடுகளில் இருந்து வந்து பணிபுரிவோர் அதிக எண்ணிக்கையில் வசிக்கின்றனர்.



இவர்களில் பெரும்பாலானோர் கட்டட வேலை, கார் மற்றும் கனரக வாகன ஓட்டுநர்கள், விநியோக ஊழியர்களாக பணியாற்றுகின்றனர். குடும்பத்தினருக்கு பணத்தை சேமிப்பதற்காக இவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மூன்றுவேளை சாப்பிடாமல் பட்டினியுடன் நாட்களை கழிக்கின்றனர். இந்நிலையை மாற்ற வேண்டும் என, ஐக்கிய அரபு எமிரேட்சின் பிரதமர் ஷேக் முகமது பின் ரஷீத் அல் மக்தோம் கடந்த ஆண்டு தெரிவித்தார்.

இதன் ஒரு பகுதியாக, டுபாயில் இலவச உணவு அளிக்கும், "வெண்டிங் மிஷின்" எனப்படும், தானியங்கி இயந்திரங்களை நகரின் பல்வேறு பகுதிகளிலும் அவர் நிறுவியுள்ளார். இந்த உணவு இயந்திரங்கள் கடந்த 17ஆம் தேதி முதல் செயல்பாட்டுக்கு வந்தன. டுபாயின், "அஸ்வாக்" மளிகை கடைகளின் வாயிலில் இந்த இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதில், அரபி ரொட்டி மற்றும், "பிங்கர் ரோல்" ஆகிய இரண்ட வகை உணவுகள், சுடச்சுட தயாரிக்கப்பட்டு ஒரு நிமிடத்தில் அளிக்கப்படுகின்றன. இந்த இலவச உணவு திட்டத்துக்கு தனிநபர்களும் நன்கொடை அளிக்கலாம் என டுபாய் அரசு தெரிவித்துள்ளது. (அ)

# ஆஸியில் கொத்துக் கொத்தாக கரை ஒதுங்கிய திமிங்கலங்கள்

கான்பரா, செப். 23

ஆஸ்திரேலியா நாட்டின் டாஸ்மேனியா தீவில் உள்ள மேக்வாரி துறைமுகத்துக்கு அருகே உள்ள கடற்கரையில் நேற்று முன் தினம் 200-க்கும் அதிகமான திமிங்கலங்கள் கரை ஒதுங்கின. ஒரே நேரத்தில் கொத்து கொத்தாக திமிங்கலங்கள் கரை ஒதுங்கியது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவற்றில் பாதிக்கும் அதிகமான திமிங்கலங்கள் இன்னும் உயிருடன் இருப்பதாக நம்பப்படுகிறது.

எனவே அவற்றை மீட்டு மீண்டும் கடலுக்குள் விடுவதற்கான முயற்சிகளில் கடற்படையினரும், தன்னார்வலர்களும் ஈடுபட்டுள்ளனர். எனினும் திமிங்கலங்கள் கரை ஒதுங்கியுள்ள இடம் சிக்கலான பகுதியாக இருப்பதால் மீட்பு குழுக்களால் உடனடியாக அங்கு செல்ல முடியவில்லை என்று கூறப்படுகிறது. (அ)

# ட்ரம்ப் மற்றும் பிள்ளைகளுக்கு எதிராக ஊழல் மோசடி வழக்கு

நியூயோர்க், செப். 23

அமெரிக்கவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் அவரது 3 பிள்ளைகளுக்கு எதிராக ஊழல் மோசடி வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அவர்களது குடும்ப நிறுவனமான 'ட்ரம்ப் அமைப்பு' மீதான விசாரணைகளுக்கு பின்னரே அவர்கள் மீது குற்றஞ் சாட்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடன் பெறுவதற்கும் குறைந்த வரி வருமானத்தை செலுத்துவதற்கும் தமது வியாபாரத்தின் மதிப்பு குறித்து பொய்யுரைத்தாக சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

2011 முதல்2021ஆம்ஆண்டு வரையான காலப்பகுதியில் ட்ரம்ப் அமைப்பு, ஏராளமான மோசடி செயல்களை செய்ததாக சட்டத்தரணிகள் குறிப்பிட்டுள்ளனர். எவ்வாறாயினும், இந்த குற்றச்சாட்டை ட்ரம்ப் முழுமையாக நிராகரித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் பிள்ளைகளான டொனால்ட் ஜூனியர், இவன்கா மற்றும் எரிக் ட்ரம்ப் மற்றும் ட்ரம்ப் அமைப்பின் 2 நிர்வாகிகளான அலன் வெய்சல்பெர்க், ஜெப்ரி மெக்னி ஆகியோரும் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர். (அ)



## கொரிய ஓப்பன் ரென்னிஸ் காலிறுதி சுற்றில் ரடுகானு!

சியோல், செப். 23

பிரிட்டனின் எம்மா ரடுகானு பெல்ஜியத்தின் யானினாவை வீழ்த்தி கொரிய ஓப்பனின் காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

சியோலில் நடக்கும் கொரிய ஓப்பன் போட்டியில் உலக தரவரிசையில் 77ஆவது இடத்திலிருக்கும் ரடுகானு யானினாவை எதிர்கொண்டார்.

முதல் செற்றை 6 - 3 என்று இலகுவாக வெற்றி கொண்ட ரடுகானு, இரண்டாவது செற்றில் சற்றுப் போராட நேரிட்டது. எனினும் அந்த செற்றை 7 - 5 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

காலிறுதிப் போட்டியில் ரடுகானு 19 வயதான போலந்தின் மக்டா லினெட்டை எதிர்கொள்கிறார் . அவர் ரென்னிஸ் தரவரிசையில் 51ஆவது இடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## கோலி சாதனையை தகர்த்தார் ரிஸ்வான்

கராச்சி, செப். 23

விராட் கோலி சாதனையை முறியடித்த ரிஸ்வான், பாபர் அஸாமின் சாதனையை சமன் செய்துள்ளார்.

பாகிஸ்தான் சென்றுள்ள இங்கிலாந்து அணி 7 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடுகிறது. இதில் முதல் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் பாகிஸ்தான் அணியின் முகமது ரிஸ்வான் 46 பந்துகளில் 68 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் அதிவேகமாக 2 ஆயிரம் ஓட்டங்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் விராட் கோலி சாதனையை முறியடித்து, பாபர் அசாமின் சாதனையை ரிஸ்வான் சமன் செய்தார்.

கோலி தனது 56 இனிங்ஸ்களில் 2,000 ஓட்டங்களை கடந்தார். பாகிஸ்தான் வீரர் பாபர் அசாம் ஏற்கனவே 52 இனிங்ஸ்களில் இந்த சாதனையை படைத்திருந்தார். தற்போது ரிஸ்வானும் தனது 52 இனிங்ஸ்களில் இந்த சாதனையை படைத்துள்ளார்.

இதன் மூலம் சர்வதேச இருபது -20 கிரிக்கெட்டில் அதிவேகமாக 2000 ஓட்டங்களை கடந்த வீரர்களில் பாபர் அஸாம், முகமது ரிஸ்வான் இருவரும் முதல் இடத்தில் உள்ளனர்.

# டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி; 2023இல் ஓவல் மைதானத்தில்!

டுபாய், செப். 23

ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பி யன்ஷிப் இறுதிப் போட்டிகள் அடுத்த வருடம் லண்டன் தி ஓவல் விளையாட்டரங்கிலும் 2025இல் லோர்ட்ஸ் விளையாட்டரங்கிலும் நடைபெறவுள்ளன.

சர்வதேச கிரிக்கெட் பேரவை இதனை நேற்று இதனை உறுதி செய்தது.

அடுத்த இரண்டு சுழற்சிகளுக்கான டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிகளுக்கு பிரசித்தி பெற்ற இரண்டு மைதானங்களை உறுதிசெய்வதையிட்டு மகிழ்ச்சி அடைவதாக ஐ. சி. சி. பிரதம நிறைவேற்று அதிகாரி ஜெவ் அலார்டைஸ் தெரி வித்தார்.



'அடுத்த வருடம் ஐசிசி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியை ஓவலில் நடத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், இந்த மைதானம் மரபு ரீதியான மற்றும் அற்புதமான சுற்றுசூழலைக் கொண்டுள்ளது. இதுபோன்ற முக்கியமான போட்டிக்கு இந்த மைதானம் மிகவும் பொருத்தமானது.

'அதனைத் தொடர்ந்து 2025 இறுதிப் போட்டியை லோர்ட்ஸில் நடத்தவுள்ளோம். இந்த விளையாட்டரங்கு இறுதிப் போட்டிக்கு பொருத்தமான பின்னணியை வழங்கும்' என்றார் அவர்.

'சௌத்ஹம்ப்டனில் நியூசிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் கடந்த வருடம் நடைபெற்ற இறுதிப் போட்டி இரசிகர்களைப் பெரிதும் கவர்ந்தது. அதேபோன்று தி ஓவலில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியை உலகெங்கும் உள்ள ரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள் என நான் நம்புகிறேன். இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபை, சரே கவுண்டி கிரிக்கெட் கழகம் மற்றும் மார்லிபோர்ன் கிரிக்கெட் கழகம் ஆகியவற்றுக்கு ஐசிசி சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்' எனவும் அவர் கூறினார்.

சரே கவுண்டி கிரிக்கெட் கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்டீவ் எல்வேர்தி கருத்து வெளியிடுகையில், 'உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியை நடத்த ஓவல் தேர்வு செய்யப்பட்டிருப்பது எமக்கு பெரும் கௌரவமாகும். உலகின் இரண்டு சிறந்த அணிகள் தெற்கு லண்டனில் விளையாடுவது ஓர் அருமையான நிகழ்வாக இருக்கும்' என குறிப்பிட்டார்.

இதேவேளை, '2025இல் ஐசிசி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியை லோர்ட்ஸ் விளையாட்டரங்கு அரங்கேற்றுவதையிட்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். ஐ. சி. சி. அடுத்த இரண்டு இறுதிப் போட்டிகளை லண்டனில் நடத்தத் தீர்மானித்துள்ளது மகத்தான விடயம். இரண்டு மைதானங்களும் சாம்பியன்ஷிப்பின் உச்சக்கட்டத்திற்கு பொருத்தமான இடங்களாகும்' என மார்லிபோன் கிரிக்கெட் கழகத்தின் (எம்சிசி) பிரதம நிறைவேற்று அதிகாரியும் செயலாளருமான கய் லெவெண்டர் தெரிவித்தார்.

2023 மற்றும் 2025 ஐசிசி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிகளுக்கான திகதிகள் உரிய நேரத்தில் உறுதி செய்யப்படும் - என்றார். (ஐ)

### இருபது - 20 தரவரிசை போட்டி:

# பாபர் அஸாமை பின்தள்ளி சூர்யகுமார் மூன்றாமிடத்தில்!

டுபாய், செப். 23

பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அஸாமை பின்தள்ளி இந்தியாவின் சூர்யகுமார் யாதவ் இருபது - 20 போட்டி தரவரிசையில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

மொகாலியில் நடந்த முதல் இருபது - 20 போட்டியில் இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியிடம் வீழ்ந்தது.

இருப்பினும் இந்த போட்டியில் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் அதிரடியாக ஆடியிருந்தனர். சூர்யகுமார் யாதவ் 46 ஓட்டங்கள் (25 பந்துகள்), லோகேஷ் ராகுல் 55 ஓட்டங்கள் (35 ஓட்டங்கள்) என சிறப்பான பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

இந்நிலையில், ஐ. சி. சி.யின் ஆடவருக்கான இருபது - 20 போட்டிக்கான தரவரிசையில் பாபர் அஸாமை பின்தள்ளி சூர்யகுமார் யாதவ் (780 புள்ளி) 3ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இந்தப் பட்டியலில் முதல் இடத்தில் பாகிஸ்தான் வீரர் முகமது ரிஸ்வான் (825 புள்ளி) உள்ளார். 2ஆவது இடத்தில் தென்னாபிரிக்க அணியின் எய்டன் மார்க்ரம் உள்ளார்.

லோகேஷ் ராகுல் 5 இடங்கள் முன்னேறி 18ஆவது இடத்தை பிடித்துள்ளார். ரோஹித் சர்மா 14ஆவது இடத்திலும் கோலி 16ஆவது இடத்திலும் உள்ளனர்.

இதேபோன்று, சகலதுறை வீரர்களுக்கான தரவரிசை பட்டியலில் ஹதர்திக் பாண்டியா மீண்டும் முதல் 5 இடங்களுக்குள் நுழைந்துள்ளார். அவர் தற்போது 180 புள்ளிகளுடன் 5ஆவது இடத்தில் உள்ளார். (ஐ)



# பழைய தண்டவாளம் விற்று டொலர்கள் தேடும் இலங்கை!

## சபையில் கூறினார் அமைச்சர் பந்துல

**கொழும்பு, செப். 23**

**நெருக்கடிக்கு மத்தியில் அந்நிய செலாவணியை ஈட்டுவதற்காக பழைய இரும்பு தண்டவாளங்களை விற்பனை செய்வதற்கான சர்வதேச விலைமனு கோரலை இலங்கை ரயில் திணைக்களம் மேற்கொள்ளும் என போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.**

அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக, பழைய உலோகங்களை சர்வதேச விலைமனு கோரல் மூலம் டொலருக்கு விற்குமாறு தான் அறிவுறுத்தினேன் என்று அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாங்கள் பழைய தண்டவாளங்கள் மற்றும் பிற உலோக கழிவுகளை விற்பனைக்காக சேகரிக்கிறோம். இரண்டு வருடங்களாக வட்டி விகிதங்களை நசுக்கிப் பணத்தை



அச்சடித்ததன் பின்னர் வரலாற்றில் மிக மோசமான நாணய நெருக்கடியின் பிடியில் இலங்கை சிக்கியுள்ளது.

நாட்டில் ரயில் திணைக்களத்திலும் தண்டவாளங்கள் பற்றாக்குறையாக இருந்தன.

எனினும், தண்டவாளங்களை இறக்குமதி செய்ய முடியவில்லை. இதற்காக அனுராதபுரத்துக்கு வடக்கே ஒரு பாதையில் இருந்து அகற்றப்பட்ட சில தண்டவாளங்கள் பயன்படுத்தப்படலாம்.

பழுதடைந்த தண்டவாளங்கள் காரணமாக, தெற்கு ரயில் பாதையில், மணிக்கு 20 கிலோமீற்றர் கதியிலேயே ரயில்கள் இயக்கப்பட்டு வந்தன. இதனால் குறித்த தண்டவாளங்களை அகற்றினோம்-என்றார். (அ)



# திருமலைத் துறைமுகத்தில் இருந்து 30 வருடங்களுக்கு பின்னர் ஏற்றுமதி

திருமலை, செப். 23

திருகோணமலை துறைமுகம் 30 வருடங்களுக்கு பின்னர் தனது முதலாவது ஏற்றுமதியை மேற்கொண்டுள்ளதாக இலங்கை துறைமுக அதிகாரசபை அறிவித்துள்ளது.

இந்த முதல் ஏற்றுமதி கப்பலில் புல்மோட்டை கனிய மணல் லிமிடெட் நிறுவனத்துக்குச் சொந்தமான கனிய மணல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த கனிய மணலை சீனாவிற்கு ஏற்றுமதி செய்துள்ளதாக இலங்கை துறைமுக அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# முட்டையொன்றின் விலை 75 ரூபா வரை அதிகரிக்கும்

கொழும்பு, செப். 23

இரசாயன உரத்துக்கு விதிக்கப்பட்ட தடைக் காரணமாக, நாட்டில் முட்டை மற்றும் கோழிப்பண்ணை தொழில் பாரிய வீழ்ச்சி நிலையை அடைந்துள்ளதாக தேசிய கால்நடைவள அபிவிருத்திச் சபையின் தலைவர் பேராசிரியர் எச்.டபிள்யு சிறில் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில், கோழிகளின் எண்ணிக்கை பாரியளவில் குறைவடைந்துள்ளதால், முட்டை மற்றும் கோழி இறைச்சித் தொழிற்துறையை மீள முன்னோக்கி கொண்டு செல்வதற்கு மேலும் காலம் எடுக்கும் என அவர் குறிப்பிட்டார்.

வர்த்தக அமைச்சு முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையை அமுலாக்குவதற்கு முன்னர், கால்நடைவள அபிவிருத்தி சபையில் எவ்வித ஆலோசனைகளையும் பெறவில்லை.

முட்டையொன்றுக்காக 49 ரூபா செலவாகின்றது. இவ்வாறிருக்கையில், வெள்ளை முட்டையொன்று 43 ரூபாவுக்கும், சிவப்பு முட்டையொன்று 45 ரூபாவுக்கும் விற்பனை செய்ய வேண்டும் என அரசாங்கத்தினால் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் பலர் இந்த தொழிற்துறையை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வருடம் ஒன்றுக்கு, 80 ஆயிரம் முட்டையிடும் கோழிகள் உருவாக்கப்படும் நிலையில், முட்டை தீவணம் இன்மையினால் குறித்த எண்ணிக்கை தற்போது 10 ஆயிரம் வரை வீழ்ச்சியடைந்துள்ளன.

இதன்காரணமாக எதிர்வரும் காலப்பகுதியில் முட்டையொன்றின் விலை 75 ரூபா வரை செல்லும் என அவர் மேலும் கூறினார். (அ)

# கிழக்கு மாகாண விளையாட்டு பேரவையின் எதிர்கால வேலைத்திட்டம் குறித்து ஆராய்வு

திருமலை, செப். 23

விளையாட்டுத்துறை அமைச்சினால் நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாண விளையாட்டுப் பேரவை கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் கூடியது.

பாடசாலை மட்டத்தில் அடையாளம் காணும் விளையாட்டு வீரர்களை தேசிய மட்டத்திற்கு கொண்டு செல்லும் வரை அவர்களை பாதுகாப்பதற்கான விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், பாடசாலை நேரம் முடிவடைந்த பின்னர் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பு அமைப்புகளுக்கு அந்த விளையாட்டு வீரர்களை இடமாற்றம் செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை அமைப்பது தொடர்பிலும் இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது.

திறமையான விளையாட்டு வீரர்கள் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும், அவர்களின் நல்வாழ்வுக்காக மாகாண விளையாட்டு நிதியை நிறுவவும் இதன்போது முடிவு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர் துசித பி. வணிகசிங்ஹ, ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, மாகாண கல்விச் செயலாளர் எச்.ஈ.எம். டப்லியு. ஜி திஸாநாயக்க, மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ் உட்பட மாகாண விளையாட்டு சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (அ)

# வெல்லாவெளி சுகாதாரப் பிரிவில் கர்ப்பிணிகளுக்கு சத்துணவு வவுச்சர்

மட்டக்களப்பு, செப். 23

மட்டக்களப்பு வெல்லாவெளி சுகாதார வைத்திய அலுவலகத்தில் 'கோயோ' நிறுவனத்தினால் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சத்துணவு வவுச்சர் வழங்கிவைக்கும் நிகழ்வு கடந்த 20ஆம் திகதி நடைபெற்றது.

போரதீவுப்பற்று பிரதேசத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போஷாக்கான மட்டத்தை அதிகரிப்பதற்கான சத்துணவு ஐந்தாயிரம் ரூபா பெறுமதியான வவுச்சர்கள் வழங்கப்பட்டன.

'பவுச்சர் செயா மைக்ரோ கிரடிட் லிமிடெட்' நிதி அனுசரணையுடன் கோஜோ அறக்கட்டளை ஜப்பான் நிறுவனத்தினால் போரதீவுப்பற்று வெல்லாவெளி சுகாதார வைத்திய அலுவலகத்துக்குட்பட்ட 346 கர்ப்பிணி தாய்மார்களுக்கு 5000 ரூபாய் பெறுமதியான சத்துணவு வவுச்சர் வழங்கப்பட்டது.

வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.விவேகாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய பணிப்பாளர் வைத்தியர் சுகுணன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் போரதீவுப்பற்று பிரதேச சபை தவிசாளர் யோ.ரஜனி போரதீவுப்பற்று பிரதேச செயலக உதவி செயலாளர் - சேயா நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் ஏ. சந்திரகுமார் மற்றும் வெல்லாவெளி சுகாதார வைத்திய பரிசோதகர் அலுவலக தாய் சேய் உத்தியோகஸ்தர்கள் மற்றும் போரதீவுப்பற்று வெல்லாவெளி சுகாதார வைத்திய பிரிவுக்குட்பட்ட கர்ப்பிணி தாய்மார்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# பாரம்தூக்கி இயக்குநர்களாக பணியில் இலங்கை பெண்கள்!

கொழும்பு, செப். 23

இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக செயற் பாடுகளை விரிவுபடுத்துமாறு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

உலகின் பல நாடுகளைப் போன்று இலங்கையிலும் துறைமுகத்தில் பாரம்தூக்கி (கிரேன்) இயக்குநர்களாக பெண்களும் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். எதிர்காலத்தில் மேலும் பலரை ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து தொடர்பான அமைச்சு ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டத்தில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

## நிலையான...

விவகார அமைச்சர் பேரவையில் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் நேற்று கேள்வி எழுப்பினார்.

அதில், கடந்த 2015 செப்ரெம்பரில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் அனுசரணையில் அதாவது அவரின் இணக்கத்துடன், 33/1 என்ற தீர்மானம் முன்வைக்கப்பட்டது. இதில், சர்வதேச நாடுகளில் நீதிபதிகளால் விசாரிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், பின்னர் இலங்கையின் கோரிக்கைக்கு அமைய அது பொதுநலவாய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளின் நீதிபதிகள் என்றவாறு மாற்றப்பட்டது. எனினும், இந்த முறை வெளிவிவகார அமைச்சருடன் அப்போதைய மற்றும் தற்போதைய நீதியமைச்சராக விஜயதாஸ ராஜபக்ஷவும் ஜெனிவா சென்றிருந்த நிலையில், அரசாங்கத்தின் நிலைப்பாடு அமர்வின்போது தெரிவிக்கப்பட்டது. இதன்போது. வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வெளியக பொறிமுறை அரசமைப்புக்கு முரணானது. 2015 ஆம் ஆண்டு அரசமைப்புக்கு உட்பட்டிருந்த இந்த விடயம், தற்போது முரணானது எப்படி என்று கேட்டார்.

இதற்கு பதிலளித்த நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் கொண்டிருக்கும் அக்கறையை நானும் கொண்டிருக்கிறேன். எனினும், மாறிவந்த அரசாங்கங்கள் காரணமாக இதில் மாற்றங்கள் ஏற்பட்டமை யாவரும் அறிந்ததே. இந்த நிலையில் இந்தப் பிரச்னை குறித்து எதிர்வரும் வாரங்களில் வடக்கு, கிழக்கில் நிலையான சமாதானத்தை பேணும் வகையில் அந்த மாகாணங்களின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்த உத்தேசித்துள்ளேன் - என்றார். (ஐ)

## நாகர்கோவில்...

பர் 22ஆம் திகதி விமான படையினரின் புக்காரா விமானம் வீசிய குண்டு தாக்குதலில் நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் 21 மாணவர்கள் கொல்லப்பட்டனர். இவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இரு பிள்ளைகளைப் பறிகொடுத்த தந்தையான சுந்திரலிங்கம் பிரதான சுடரை ஏற்றி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து சுடர்கள் ஏற்றப்பட்டன. அடுத்து, நினைவுத் தூபிக்கும் மாணவர்களின் திருவுருவப் படங்களுக்கும் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ - 02)

## பலாலிக்கு...

இந்திய நிறுவனங்களுடன் இது தொடர்பில் பலமுறை பேச்சுக்கள் நடத்தப்பட்டபோதும் அது பலனளிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும் இந்திய விமானங்களுக்கு சலுகைகளை - அதாவது ஏனைய விமான நிலையங்களில் வழங்கப்படுவது போன்று வரிச் சலுகையை வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அமைச்சரை கோரினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், இந்திய விமான நிறுவனம் ஒன்றாவது யாழ்ப்பாணத்துக்கு விமானங்களை இயக்க முன்வந்தால் கோரிக்கையை பரிசீலிக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.

மேலும், பலாலி விமான நிலையத்தை அரசாங்கம் செலவு செய்து புனரமைத்ததுடன் ஊழியர்களுக்கு சம்பளத்தையும் வழங்கி வருகிறது. ஆனால், யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு சேவைகளை வழங்க சர்வதேச நிறுவனங்கள் ஆர்வம் காட்டவில்லை - என்றார்.

பலாலி விமான நிலையம் இந்தியாவின் ஆதரவுடன் புனரமைக்கப்பட்டு கடந்த 2019 நவம்பர் 11ஆம் திகதி யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையமாக திறந்து வைக்கப்பட்டது. கொரோனா தொற்று பரவலை தொடர்ந்து 2020 மார்ச் 15 முதல் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நல்லிணக்கத்து...

அங்கு அவர் மேலும் தெரிவித்தவற்றின் முக்கிய விடயங்கள் வருமாறு,

இலங்கையில் சிறுபான்மையினரின் உரிமைகள் அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. மதவெறுப்பு மற்றும் அலட்சியம் என்ற விடயங்களில் பூச்சிய சகிப்புத்தன்மையை அரசாங்கம் பின்பற்றுகின்றது என்றும் அவர் கூறினார்.

தற்போதைய அரசாங்கம் சமூகங்களுக்கிடையில் நம்பிக்கை மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமை அளித்துள்ளது. சமூக மற்றும் பாரம்பரிய நெறிமுறைகளுக்கு அமைவாக, இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தையும் சமூகங்களுக்கு இடையில் புரிந்துணர்வையும் உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு மட்டங்களில் வழமையான உரையாடல்கள் இடம்பெறுகின்றன.

நாட்டில் உள்ள அனைத்து சமூகத்தினரின் பாதுகாப்பையும் உறுதி செய்ய உறுதி பூண்டுள்ளோம். முன்னோக்கிச் செல்லும்போது, அனைவருக்கும் நிலையான வளர்ச்சியடைந்த தேசத்தை நோக்கிய மாற்றத்தை இலங்கை எதிர்பார்க்கிறது - என்றும் கூறினார். (ஐ)

## இந்தியா...

டமைப்பின் சி. சிறீதரன் எம். பி.

மேலும், நேற்றைய தினம் விமான சேவைகள் அமைச்சரிடம், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும் இந்திய விமானங்களுக்கு சலுகைகளை - அதாவது ஏனைய விமான நிலையங்களில் வழங்கப்படுவது போன்று வரி குறைப்பை வேண்டும். யாழ்ப்பாணத்துக்கு சேவைகளை நடத்த இந்தியா எயார்வேஸ், இண்டிகா நிறுவனங்கள் தயாராகவுள்ளன- என்றார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், நாங்கள் விமானம் வரும் என்று பார்த்துக் கொண்டே இருந்தோம். ஆனால் வரவில்லை. பிரச்னைகள் இருந்தால் பேசி தீர்க்கலாம். உண்மையிலேயே விமானங்களை கொண்டுவர முடியுமென்று உறுதிப்படுத்தினால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம். முடிந்தால், நீங்கள் ஒரு விமானத்தை கொண்டுவந்து காட்டுங்கள்", என்றார்.

## யாழில் போதை...

உயிரிழப்புக்கள் சம்பவிப்பது அதிகரித்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். மேலும், வெளிப்படுத்தப்பட்ட தரவுகளின் அடிப்படையில், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 10 பெண்கள் உட்பட 491 பேர் போதைப்பொருள் பாவனையாளர்களாக இருக்கின்றனர்.

இந்த வருடம் 13 பெண்கள் உட்பட 854 பேர் போதைப்பொருள் பாவனையாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், இந்த வருடத்தில் இது வரை 10 பேர் போதைப் பாவனையால் உயிரிழந்தனர் என்றும் அவர் கூறினார்.

# வடக்குக்கான ரயில் சேவை 5 மாதங்கள் நிறுத்தப்படும்!

## போக்குவரத்து அமைச்சர்

கொழும்பு, செப். 23

இந்தியாவின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் வடக்குக்கான ரயில் பாதை புனரமைப்பு பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. இதன்போது ஜனவரி மாதம் முதல் ஐந்து மாதங்களுக்கு வடக்குக்கான ரயில் சேவைகள் நிறுத்தப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று தமிழ் பத்திரிகைகளின் செய்தியாளர்களுடன் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்குக்கான ரயில் சேவைகள் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் வடக்குக்கான ரயில் பாதை புனரமைப்பு பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. வடக்கு மக்களுக்கு சிறந்த ரயில் சேவையை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே வடக்குக்கான ரயில் பாதை புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மேற்படி புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஜனவரி மாதம் முதல் ஐந்து மாதங்களுக்கு வடக்கிற்கான ரயில் சேவைகள் நிறுத்தப்படவுள்ளன.

அரச ஊழியர்களின் நலன் கருதி காங்கேசன்துறைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் விசேட ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு அவை சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதே வேளை வடக்குக்கான இரவு சொகுசு ரயில் சேவைகளும் நடைமுறையில் உள்ளன - என்றார். (ஐ)

# விஜயன் வருகைக்கு முன்பு கோணேசர் கோயில் உள்ளது

## சபையில் சுமந்திரன் எம். பி.

கொழும்பு, செப். 23

இலங்கைக்கு விஜயன் வருகைக்கு முன்பே திருக்கோணேஸ்வரம் ஆலயம் உள்ளது. இதனை வரலாற்றாசிரியர் போல் பீரிஸும் உறுதிப்படுத்தியுள்ளார் - இப்படி பாராளுமன்றில் தெரிவித்துள்ளார் சுமந்திரன் எம். பி.

நேற்று உரையாற்றிய அவர், நாயன்மார்களால் பாடல் பெற்ற தலமான திருக்கோணேஸ்வரத்தை ஆக்கிரமிக்க புதிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இதுபோன்று குருந்தூர்மலையில் மக்களின் காணிகளை அபகரிக்கவும் தொல்லியல் திணைக்களம் நடவடிக்கைகளை எடுக்கிறது.

வடக்கு, கிழக்கில் தொல்லியல் திணைக்களம் முன்னெடுக்கும் ஆக்கிரமிப்பு முயற்சிகளை நிறுத்த வேண்டும். அத்துடன், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடுபவர்களை கைது செய்வதையும் அச்சுறுத்துவதையும் தடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

# ஒருபகுதி நிரப்பு நிலையங்கள் நவம்பரில் தனியார் மயமாகும்

## எரிசக்தி அமைச்சர்

கொழும்பு, செப். 23



இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 1,250 எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் ஒரு பகுதியின் கட்டுப்பாட்டை தனியாருக்கு வழங்க தீர்மானித்துள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான எரிபொருள் நிரப்பும் நிலையங்களை தனியாருக்கு வழங்குவதற்கான வேலைதிட்டத்தின் மீளாய்வு கூட்டத்தின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# சட்டவிரோத கடற்றொழில் 7 பேருக்கு ரூ. 140,000 அபராதம்!

வடமராட்சி, செப். 23

வெற்றிலைக்கேணியில் சட்டவிரோத ஒளிபாய்ச்சி சுருக்குவலைத் தொழிலில் ஈடுபட்ட 7 பேருக்கு ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக இந்தத் தொழில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஏற்றனர். இதன் அடிப்படையில் 7 பேருக்கும் தலா 20 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. சட்டவிரோதமாகப் பயன்படுத்திய சுருக்குவலை தீயிட்டு எரிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும்

## அமெரிக்க இராஜாங்க துணைச் செயலர்

வொஷிங்டன், செப். 23

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என அமெரிக்காவின் துணைச் செயலாளர் விக்டோரியா நுலாண்ட் உறுதியளித்துள்ளார்.

தற்போது அமெரிக்கா சென்றுள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைபொருளாதார நெருக்கடியில் இருந்து மீள அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் சுதந்திரமான மற்றும் வளமான பிராந்தியத்திற்கு ஆதரவளிக்க ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றும் அமெரிக்காவின் துணைச் செயலாளர் விக்டோரியா நுலாண்ட் ருவிட்டரில் பதிவிட்டுள்ளார். (அ)



# நாணய நிதிய உடன்படிக்கை அமைச்சரவைக்கும் தெரியாது!

## கைவிரித்தார் சபாநாயகர்



கொழும்பு, செப். 23

இலங்கைக்கும் சர்வ தேச நாணய நிதியத்துக் கும் இடையில் எட்டப் பட்ட ஊழியர் மட்ட ஒப்பந்தம் தொடர்பில் அமைச்சரவைக்கு விளக் கமளிக்கப் படவில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத் துக்கு அறிவித்தார்.

நேற்று காலை பாராளுமன்ற அமர்வின் ஆரம்பத்தின்போது, சபாநாயகர் அபேவர்தன, அதிகாரிகள் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளபோதிலும், சர்வதேச நாணய நிதிய சபை மற்றும் ஏனைய கடன் வழங்கும் நாடுகளின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உடன்படிக்கையை இறுதி செய்வதற்கு முன்னர் சில திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என ஜனாதிபதி தமக்கு அறிவித்துள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார்.

இறுதி வரைவுக்கு இலங்கையும் சர்வதேச நாணய நிதியமும் இணக்கம் தெரிவித்தவுடன், அமைச்சரவைக்கு இவ்விடயம் தொடர்பில் விளக்கமளிக்கப்படும் என அவர் மேலும் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் குறித்து அமைச்சரவைக்கு அறிவிக்கப்படும்போது எதிர்க்கட்சிகள் மற்றும் ஆர்வமுள்ள ஏனைய தரப்புக்களும் அழைக்கப்படும் என சபாநாயகர் தெரிவித்தார்.

இந்த ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் வெளியிடவேண்டும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதனையடுத்து நிதியமைச்சகத்திடம் சபாநாயகர் விளக்கம் கோரியுள்ளார்.

குறித்த ஆவணத்திற்கு இதுவரை அமைச்சரவை அங்கீகாரம் வழங்கவில்லை எனச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

**2.9** பில்லியன் அமெரிக்க டொலர்களின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் **48** மாத ஏற்பாட்டுடன் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கு சர்வதேச நாணய நிதியமும் இலங்கையும் ஊழியர் மட்ட உடன்பாட்டை எட்டியுள்ளதாக செப்ரெம்பர் **1**ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

இலங்கை அதிகாரிகளுக்கும் பீட்டர் ப்ரூயர் மற்றும் மசாஹிரோ நோசாகி தலைமையிலான சர்வதேச நாணய நிதியக் குழுவிற்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. (அ)




# சங்கிலியன் தோரணை வாயில் புனரமைப்புப் பணி ஆரம்பம்!

யாழ்ப்பாணம், செப். 23

யாழ்ப்பாணம் சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்பு பணிகள் நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொல்லியல் திணைக்களமும் யாழ்ப்பாண மரபுரிமை மையமும் இணைந்து புனர்நிர்மாண பணிகளை ஆரம்பித்துள்ளன.

இதற்காக **2.3** மில்லியன் ரூபாய் செலவு மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், அதற்கான நிதி பங்களிப்பை யாழ்ப்பாண மரபுரிமை மையம் வழங்கவுள்ளது.

குறித்த தோரண வாயிலின் பாதுகாப்பு , புனர்நிர்மாணம் மற்றும் நில வடிவமைப்பு ஆகிய செயற்திட்டமே முன்னெடுக்கப்படவுள்ளது.

சங்கிலியன் தோரண வாயில் அல்லது சங்கிலித்தோப்பு வளைவு என அழைக்கப்படுவது யாழ்ப்பாண அரசின் கடைசி மன்னனான சங்கிலியனின் மாளிகை அமைந்திருந்த இடம் எனக் கருதப்படுகின்றது. (அ)




# குருந்தூர்மலை போராட்டத்தில் கைதான இருவருக்கும் நீதி கேட்டு ஆர்ப்பாட்டம்!

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்தனர்

யாழ்ப்பாணம், செப். 23

குருந்தூர்மலைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டமைக்கு நீதி கோரியும் பௌத்தமயமாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக நேற்று நண்பகல் **12** மணியளவில் ஒன்றுகூடிய பல்கலைக் கழக மாணவர்கள் அங்கிருந்து கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக இராமநாதன் வீதி ஊடாக பரமேஸ்வராச் சந்தியை அடைந்து அங்கிருந்து சிறிது நேரம் வீதியை முடக்கிப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் பின்னர் பேரணியாக பல்கலைக்கழகத்தை வந்தடைந்தனர்.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய **632** ஏக்கர் பூர்வீக காணிகளை தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும், நீதிமன்ற கட்டளையைப் புறந்தள்ளி பௌத்த கட்டுமானம் மேற்கொள்ளப்படுகின்றமை என்பவற்றைக் கண்டித்து நேற்று முன்தினம் குருந்தூர்மலையில் அப்பகுதி மக்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள், சிவில்சமூகப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்புடன் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் இ.மயூரன் ஆகியோர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனை கண்டித்தே யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ரவிகரன் மற்றும் மயூரனை விடுதலை செய், எமது காணி எமக்கு வேண்டும், எமது மலை எமக்கு வேண்டும், குருந்தூர் மலையை ஆக்கிரமிக்காதே போன்ற கோஷங்கள் பல்கலைக் கழக மாணவர்களால் எழுப்பப்பட்டது.

ரவிகரன் மற்றும் மயூரன் விடுதலை செய்யப்படாவிட்டால் வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படும் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் எச்சரிக்கை விடுத்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
7.00 அணி :இயற்கை வழி



7.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.யாழ்பாவாணன்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**
12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-மலையாள திரைப்படம்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் டிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு